# கலாதீபம்

කලාදීබම්

KALADEEPAM

தீபம் : 01 | 01.12.2020 | சுடர் : 03


# இணையவழி நிகழ்நிலைக் கற்றல்

## கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னோடி நடவடிக்கை

### இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பணிப்பாளர் ஆர்.எம்.எம்.ரத்னாயக்கா பாராட்டு

இணைய வழியில் நிகழ்நிலைக் கற்கைகளை சூம் செயலி ஊடாகக் கலாசாலை மாணவரிடையே முன்னெடுப்பதில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னோடி நிறுவனமாகத் திகழ்கின்றது. அதன் இணையவழி கருத்தரங்குகள் மற்றும் நிகழ்நிலை வகுப்புகளில் நேரில் கலந்து கொண்டு பார்வையிட்டு என்னால் இதனைக் கூற முடிகின்றது எனப் பாராட்டுத்தெரிவித்தார் இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பணிப்பாளர் ஆர்.எம்.எம்.ரத்னாயக்கா



நாடு முழுவதிலும் உள்ள கலாசாலைகளின் அதிபர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கான சூம் செயலி வாயிலான கூட்டம் கடந்த 18.11.2020 புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12.30 மணிவரை இடம்பெற்றது. இதற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையிலேயே கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ச்சி பக்-02

## யோகலிங்கேசுவரர் ஆலயத்தில் மணவாளக்கோலத் திருவிழா



கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேசுவரர் ஆலயத்தில் மணவாளக்கோலத் திருவிழா கடந்த 07.11.2020 அன்று பக்திபூர்வமாக இடம் பெற்றது. ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ வி.செல்வசேனக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதிபர் உபஅதிபர் உள்ளிட்ட சில விரிவுரையாளர்களும் மாணவர்கள் சிலரும் கலந்து கொண்டனர். கொவிட் 19 நோய்த் தாக்கம் காரண தொடர்ச்சி பக்-02

## சூம் செயலி வழியான நிகழ்நிலை வகுப்பு தடங்கலின்றி நடைபெறுகின்றது

இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்காக கோப்பாய் ஆசிரிய கலாசாலையால் முன்னெடுக்கப்படும் நிகழ்நிலை வகுப்புகள் சூம் செயலியின் வழியே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரதான வகுப்புகள் இளைப்பாறிய விரிவுரையாளர் திரு வி.எஸ்.குணசீலன் அவர்களது தொடர்ச்சி பக்-02

## புதிய ஆசிரிய மாணவர்களுக்கான பதிவு நடவடிக்கைகள்

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2020 - 2021 கல்வியாண்டுக்கு அனுமதி பெற்ற ஆசிரிய மாணவர்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகள் நவம்பர்மாத இறுதி வாரத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தொடர்ச்சி பக்-02

**இணையவழி நிகழ்நிலை...**

ஒன்லைன் கற்கைகளை முன்னெடுக்க வேண்டிய தன் அவசியம் குறித்து எடுத்துரைத்த அவர் சமூக ஊடகங்களைக் கற்றலுக்காக வினைத்திறனுடன் பயன்படுத்திக் கொள்ளுமாறு கலந்திருந்த விரிவுரையாளர்களையும் அதிபர்களையும் கேட்டுக் கொண்டார்.

கொவிட் 19 பாதிப்பு அச்சுறுத்தலால் கலாசாலைகளின் கற்றல் நடவடிக்கைகள் நிறுத்தப்படுவதற்கு முன்னரே கோப்பாய் ஆசிரிய கலாசாலையினர் இணையவழிக் கருத்தரங்குகளை (வெபினார்) நடத்தத் தொடங்கியமை தீர்க்க தரிசனமான முன்னோடி நடவடிக்கை என்றும் இதில் ஈடுபட்டுள்ள அதிபர், பிரதி அதிபர் உள்ளிட்ட குழாத்தினரைத் தான் பாராட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கோப்பாய், உணவட்டுண, மட்டக்களப்பு, கம்பொல, கொட்டக்கல, பலப்பிட்டிய, அட்டாளைச்சேனை, கிராகம ஆசிரிய கலாசாலைகளின் அதிபர்கள் தமது கலாசாலைகளால் முன்னெடுக்கப்படுகின்றகொவிட் 19 இடர்காலக் கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக முன்வைப்புகளை மேற்கொண்டனர்.

இணையவழிக் கற்கைகளில் மாணவர் பங்கேற்பிற்காகக் கணிப்பீட்டுப் புள்ளிகளை வழங்குதல், இணையவழியில் பரீட்சைகளை நடத்தி அதனைக் கணிப்பீட்டுப் புள்ளிகளாகச் சேர்த்துக் கொள்ளல் போன்ற விடயங்கள் அதிபர்களால் ஆராயப்பட்டன. விரிவுரையாளர்கள் தமது தேவைகள் மற்றும் கருத்துக்களையும் பணிப்பாளருக்குத் தெரியப்படுத்தினர்.

நிகழ்வின் நிறைவில் இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதிப் பணிப்பாளர் பி.ஜி.ஐ. கெலனிஹேமாலி நன்றியுரை நல்கினார். 65 இற்கும் மேற்பட்ட கல்வியாளர்கள் நிகழ்வில் இணையவழியில் நேரடியாகப் பங்கேற்றனர். அனைவரையும் இணைப்பதற்கு சூம் செயலியை வழங்கி அனுசரணை புரிந்த இளைப்பாறிய விரிவுரையாளர் வி.எஸ்.குணசீலன் அவர்களுக்கும் இ.அருட்செல்வன் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

**சூம் செயலி வழியான...**

ஆதரவில் வழங்கப்பட்ட 500 பேர் பங்கேற்கக் கூடிய சூம் செயலி வழியாகவும் ஏனைய வகுப்புகள் குறித்த பாட விரிவுரையாளர்கள் இணையத்தில் பெற்றுக்கொள்ளும் இலவச நாற்பது நிமிடநேரசூம் செயலிவழியாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரதான சூம் செயலி வழியே நடைபெறும் வகுப்புகளில் 378 மாணவர்கள் பங்கேற்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் நாள்தோறும் 290 பேர் வரையில் பங்கேற்று வருகின்றமை அவதானிக்கப்படுகின்றது.

மேலும் இணையவழி வகுப்பின் போது விரிவுரையாளர்களால் சிலைட்டுக்களைப் பயன்படுத்திக் கற்பித்தல் மேற்கொள்ளப்படுகின்றது. அவை பின்னர் மாணவர்களுக்கான வாட்ஸ் அப் மற்றும் வைபர் குழுமங்கள் ஊடாக ஆசிரிய மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

ஒருமணிநேர வகுப்பை இணையத்தில் மேற்கொள்வதற்கு மூன்று மணித்தியாலங்கள் வரையில் முன்னாயத்தம் செய்ய வேண்டியிருப்பதாக விரிவுரையாளர்கள் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

இதேநேரம் கூகுள் போர்மைப் பயன்படுத்தி நிகழ்நிலைப் பரீட்சைகளும் மாணவர்களுக்கு நடத்தப்பட்டு வருகின்றன.

**யோகலிங்கேசுவரர்...**

மாக கோவில்களில் ஆட்கள் கூடமுடியாது என்ற கட்டுப்பாடு நிலவுவதால் மணவாளக்கோல விழாவில் ஒருசிலர் மாத்திரம் கலந்துகொண்டனர்.

**புதிய ஆசிரிய...**

நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு நடவடிக்கைகளை நிறைவுசெய்யுமாறு இசுருபாய கல்விஅமைச்சு வழிப்படுத்தியமைக்கு அமைவாக நேரிலும் அஞ்சல் வழியிலும் ஒன்லைன் மூலமாகவும் மாணவர்கள் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்களுக்கான வகுப்புகள் ஒன்லைன் மூலம் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன. இவர்களது கல்வியாண்டு 15.12.2020 தொடக்கம் 14.12.2022 வரையான காலப்பகுதியாக அமையும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# கலாதீபம்

கலாදීපම් KALADEEPAM

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின்
மாதாந்த மின்னிதழ்.
A monthly e magazine of Kopay
Teachers' college.
කෝපායි ගුරු විද්‍යාලයීය
මාසික විද්‍යුත් සඟරාව


## நமது நோக்கு

### எழுத்தறியத் தீரும் இழிதகைமை

தரம் 05 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளி வந்துள்ளன. புலமைப் பரிசில் பரீட்சையானது மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குவ தனையும் அவர்களுக்குப் பொருத்தமான பாட சாலையைப் பெற்றுக் கொடுப்பதையும் நோக் கமாகக் கொண்டிருந்தாலும் ஆரம்பக்கல்வி சார்ந்த தேர்ச்சியை மாணவன் எய்தியிருக்கின் றாரா என்பதை அறிவதற்கான குறிகாட்டியாக வும் கொள்ளத்தக்கதாகவுள்ளது.

வழமை போலவே வெற்றிபெற்ற மாண வர்கள் வெற்றிபெற்ற அதிபர்கள் - வெற்றி பெற்ற ஆசிரியர்கள் - வெற்றிபெற்ற பெற்றோர் கள் என ஒற்றைப்படையான பார்வையில் எமது சமூகம் பாராட்டி வாழ்த்தும் பண்பிற்குள் மூழ் கிக் கிடக்கின்றது. இதன் மறுபுறத்தைச் சீர்தூக் கிப் பார்க்கவேண்டிய பொறுப்பும் எம் சமூகத்த வருக்கு உண்டு.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையைப் பொறுத்தவரையில் ஒருபாடத்திற்கு 35 புள்ளி கள் என்ற அடிப்படையில் இரண்டு பாடங்களி லும் சேர்த்து 70 புள்ளிகளைப் பெறுவது சித்தி யாகக் கொள்ளப்படுகின்றது. வெட்டுப் புள்ளிக்கு மேற்பெறுதல் என்பது பல்வேறு காரணிகளில் தங்கியிருக்கின்றதாயினும் அடிப்படைத் தேர்ச்சி களின் குறிகாட்டியாக 70 புள்ளிகள் பெறுதலைச் சுட்டமுடியும்.

2020 ஆம் ஆண்டிற்கான பெறுபேற்றின் பிரகாரம் இலங்கையின் தமிழ்மொழி மூலப் பரீட்சார்த்திகள் அதிகளவில் தோற்றிய வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்கள் தொடர் ந்தும் கடைநிலையையே தக்கவைத்திருப் பதைக் காணமுடிகின்றது. கடந்த 2019 ஆம் ஆண்டுப் பரீட்சையைக் காட்டிலும் சிறிதளவி லான சதவீத அதிகரிப்பை அவை வெளிக்

தொடர்ச்சி பக்-04

[redacted]


**கலாதீபம் குழு**

**நெறிப்படுத்தல்**

திரு. வீரகத்தி கருணலிங்கம்
(அதிபர்)

**வள ஆலோசனை**

திரு. தங்கராசா கோபாலகிருஷ்ணன்
(உப அதிபர்)
திருமதி சிவசக்தி இராதாகிருஷ்ணன்
(துணை அதிபர்)

**பிரதம ஆசிரியர்**

திரு. சந்திரமௌலீசன் லலீசன்
(பிரதி அதிபர்)

**ஆசிரியர் குழு**

திரு. கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர்)
செல்வி. மாலதி பத்மநாதன்
(விரிவுரையாளர்)
திரு. வேலும்மயிலும் நந்தகுமார்
(விரிவுரையாளர்)
திருமதி சிவசக்தி ஜெயராஜா
(விரிவுரையாளர்)
திரு இராமலிங்கம் இளங்கீரன்
(ஆசிரிய மாணவர் – ஆரம்பக்கல்வி)
செல்வி நிவேதா சத்தியசீலன்
(ஆசிரிய மாணவி — த.தொ.தொழினுட்பம்)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையரா வர். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக் கள் கலாசாலையின் கருத்துக்களாகக் கொள் ளப்படமாட்டா.



**வெளியீடு**

கோப்பாய் ஆசிரிய கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி : 0212230323

# தேசிய கல்வியியற் கல்லூரியின் குருசேத்திரம் நிகழ்வு

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் இணைவு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முன்னெடுத்துவரும் குருசேத்திரம் என்ற இணையவழி நிகழ்வில் கடந்த 28.11.2020 சனிக்கிழமை அன்று சிறப்புப் பட்டிமண்டபம் இடம்பெற்றது. இதில் கல்விக் கல்லூரி விரிவுரையாளர்களும் கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர்களும் இணைந்துபங்கேற்றனர்.

கல்வியியல் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சமகாலத்தில் தமிழர்களுடைய கல்விச் செல்நெறி வலிவுறுகிறதா? நலிவுறுகிறதா? என்ற பொருளில் பட்டிமண்டபம் இடம்பெற்றது.

நிகழ்வில் கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் ஞா.இரத்தினசிங்கம் வரவேற்புரையாற்றினார். விரிவுரையாளர் ம.நிரேஸ்குமார் அறிமுகவுரையை வழங்கினார். கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் வாழ்த்துரை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் அவர்களை நடுவராகக் கொண்டு பட்டிமண்டபம் இடம்பெற்றது. இதில் வலிவுறுகின்றது என்ற அணிக்கு கலாசாலை விரிவுரையாளர் கு.பாலசண்முகன் தலைமை தாங்கினார். கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்களான திருமதி பப்சி மரியதாசன், விரிவுரையாளர் கு.ஜோதிரட்ணராஜா ஆகியோர் அணிசேர் பேச்சாளர்களாகப் பங்கேற்றனர். நலிவுறுகின்றது என்ற அணிக்கு கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் அ.ரவீந்திரன் தலைமை தாங்கினார். கலாசாலை விரிவுரையாளர்கள் திருமதி ஸ்ரீ.ஜெயக்குமாரி, வேல்நந்தகுமார் ஆகியோர் அணிசேர் பேச்சாளர்களாகக் கலந்துகொண்டனர்.

நீண்ட வாதப் பிரதிவாதங்களின் பின்னர் தீர்ப்புரை வழங்கிய நடுவர், அளவுசார் நிலையில் கல்விச் செல்நெறி வளர்ச்சிப் பாதையை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியுள்ளது என்றும் தனியே பெறுபேற்றுத் தாள் பகுப்பாய்வை வைத்துக் கல்விச் செல்நெறி வலிவுறுகிறதா நலிவுறுகின்றதா என்பதைக் கூறிவிட முடியாது என்றும் குறிப்பிட்டார். பண்பு ரீதியாக பல பண்பு நிலைகளில் தமிழ்ச் சமூகம் முன்னேற வேண்டியிருக்கிறது. போதைப் பாவனை வாள்வெட்டு என நெறிதவறிச் செல்கின்றது. தளர்வுறும் இந்நிலையில் இருந்து கல்விச் செல்நெறியைச் சரியான தடத்தில் பயணிக்க வைக்கக்கூடிய இளம் ஆசிரியர்கள் எங்கள் மத்தியில் உருவாக்கப்பட வேண்டும் என்று தனது தீர்ப்புரையில் சுட்டிக்காட்டினார்.

நிகழ்வுகளை கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் நா.அம்பிகைபாகன் நெறிப்படுத்தினார்.

---

**எழுத்தறியத் தீரும்...**

காட்டியிருப்பினும் தொடர்ந்தும் தேசிய நிலையிலான பின்னடைவான நிலையையே அவை வெளிக்காட்டி நிற்கின்றன. எடுத்துக்காட்டாக யாழ் மாவட்டத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியோருள் 84.83 வீதத்தினரே சித்தியடைந்துள்ளனர். அதாவது 15.17 வீதத்தினர் சித்தியடையத் தவறிவிட்டனர். அதாவது 8326 பேர் பரீட்சைக்குத் தோற்றி 7063 பேரே இரண்டு பாடங்களிலும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இது போன்றே அம்பாறை, வவுனியா, முல்லைத்தீவு, புத்தளம், மன்னார், கிளிநொச்சி, நுவரேலியா, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் பெறுபேறும் கீழ்நிலையில் காணப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

தமிழ்ப் பிரதேசங்களில் ஆரம்பக் கல்வித் துறை வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதையே மேற்காட்டிய பெறுபேற்று வீழ்ச்சி நிலை எமக்கு உணர்த்தி நிற்கின்றது. ஒரு பாடத்தில் 35 புள்ளிகளைப் பெறமுடியாமைக்கு அந்த மாணவர்கள் எழுதும் திறனைச் சரிவரப் பெற்றிருக்காமையே பிரதான காரணம் ஆகும்.

எழுதும் திறனை கற்றுக்கொடுப்பதில் ஆசிரியரே பிரதான கர்த்தா. எனவே இந்த இழிநிலையைப் போக்க வேண்டுமாயின் தேர்ச்சி மிக்க ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் எமக்குத் தேவையாக உள்ளனர்.

ஆரம்பக் கல்வி ஆசிரியர் நியமனம் முதல் அவர்களுக்கான பயிற்சி, ஆரம்பக் கல்வித் துறைக்கான வளப்பகிர்வு எனப் பல விடயங்களில் கவனம் செலுத்தவேண்டியமை மிகவும் அவசியமானதாகும். பாராட்டி வாழ்த்துவதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை விட உடனடியாக வேண்டி நிற்கும் வலுவூட்டலாக இதுவே விளங்குகின்றது.

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ZOOM செயலி வழி

# கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விப் பணிப்பாளரும் ஏனைய ஆசிரிய கலாசாலைகளும் முன்னெடுத்த கொரோனா கால இணையவழிக் கருத்தரங்கு ஓர் அனுபவப் பகிர்வு



அதிபர் வீ.கருணலிங்கம்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

கொவிட் - 19 இன் தாக்கம் என்பது இன்று எமது நாட்டின் கல்விப் புலத்தைப் பொறுத்த வரை இலத்திரனியல் வழியிலான மாற்றுக் கல்விச் சிந்தனையை வலிமைப்படுத்தியுள்ளது. அந்த வகையில் Zoom செயலி என்பது இதற்காக கையாளப்படும் மாற்றும் சாதனமாக விளங்கிச் சிறப்புப் பெறுகிறது. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் ஒரு வடிவமாகவே இது விளங்குகிறது. கோப்பாய் ஆசிரிய கலாசாலை இத் தொழிநுட்பத்தை எமது முன்னாள் ஓய்வுநிலை விரிவுரையாளர் திரு வ.சி.குணசீலன் அவர்கள் மூலம் பயின்று கடந்த மூன்றாம் மாதத்தில் இருந்து எமது ஆசிரிய மாணவர்களுக்கு கற்பிப்பதற்கான ஒரு ஊடகமாக வெற்றிகரமான முறையில் கையாண்டு வருகிறது. இதில் எமது பிரதி அதிபர், திரு ச.லலீசன் அவர்களின் பங்களிப்பும் அவரோடு இணைந்த ICT விரிவுரையாளர் செல்வி ப.மாலதி அவர்களின் பங்களிப்பும் முக்கியமானது. இவர்களுக்கு உறுதுணையாக செல்வி ஆ.தர்ஷினி, திரு ஏ.சேந்தன் அவர்களும் உதவியாக இருந்தனர். அந்த வகையில் இச் செயற்பாடுகள் இலங்கையின் ஏனைய கலாசாலைகளுக்கு முன்னோடியாக அமைந்ததுடன் எமது ஆசிரிய மாணவர்கள் தமது கல்வியை இணைய வழியில் தமது இருப்பிடங்களில் இருந்து தொடரவும் பெரும் வாய்ப்பாக அமைந்தன. இவ்வகையில் இச் செயற்பாடு இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாகப் பிரிவிற்கு பொறுப்பான கல்விப் பணிப்பாளர் கௌரவ ஆர்.எம்.எம்.ரத்நாயக்கா அவர்கள் - ஏனைய கலாசாலை அதிபர்கள் விரிவுரையாளர்கள் அனைவரையும் எமது கலாசாலையின் சூம் வகுப்பைப் பார்வையிடுமாறு அதிபர்களைக் கேட்டுக்கொண்டார். இதன் ஒரு அங்கமாக எல்லாக் கலாசாலைகளையும் ஒன்றிணைந்து Zoom செயலிவழி கொரோனாவுக்கு பின்னரான கலாசாலைகளின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பற்றிய ஒரு Zoom வழி கூட்டத்தை நிகழ்த்தும் பொறுப்பை எமது ஆசிரிய கலாசாலைக்கு வழங்கியிருந்தார். அக் கலந்துரையாடல் கடந்த 18.11.2020 திகதிகாலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை சிறப்பான முறையில் நடத்தப்பட்டது. அதன் அனுபவங்கள் சிலவற்றை இப்பதிவு வழி கோப்பாய் ஆசிரியகலாசாலை அதிபராக உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.


ஏற்கனவே அறிவிக்கப்பட்ட படி சரியாக 8.30 மணிக்கு தேசிய கீதம், மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இவை Zoom வழியிலே நிகழ்த்தப்பட்டன. நானும் பிரதி அதிபரும் இணைந்து Zoom வழி இதனை நெறிப்படுத்தினோம். திரு V.S.குணசீலன் அவர்களும் இதற்கு பக்கபலமாய் இருந்து செயற்பட்டார். கூட்டத்திற்கு வந்தவர்கள் தமது வரவினை Chat box இல் வழங்கப்பட்ட Google form இல் ஒன்லைன் பதிவை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டனர். இது கூட பலருக்கும் புதுமையான அனுபவமாய் இருந்தது. அதனைத் தொடர்ந்து அனைவரது வருகைகள் உறுதிப்படுத்தப்பட்டு இணையவழிக் கூட்டம் சரியாக 9.00 மணிக்கு ஆரம்பமானது. பிரதி அதிபர் அவர்கள் நிகழ்வை தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒழுங்கமைப்புச் செய்தார். எமது சிங்களபாட விரிவுரையாளர் திருமதி எம்.எச்.ஏ. சஜீவனி அவர்களும் சிங்களத்தில் இந்த விடயங்களைப் பரிமாறுவதற்கு உதவினர். முதலில் எமது ஆசிரிய கல்விக்குப் பொறுப்பான கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளர் கௌரவ ரத்நாயக்கா

அவர்களின் வரவேற்புடன் கூடிய தலைமையுரை இடம்பெற்றது.

அவர் தமது உரையில் கொவிட்-19 சூழலுக் குப் பின் ஆசிரிய கல்வியை முன்னெடுப்பதில் எதிர்கொண்டுள்ள சவால்களை எடுத்துக் கூறிய துடன் Zoom செயலி வழியான கற்பித்தல் மூலம் இச் சவாலை முறியடிப்பதில் கோப்பாய் ஆசி ரிய கலாசாலையின் செயற்பாடுகள் ஏனைய கலா சாலைகளுக்கு முன் உதாரணமான திகழ்வதாகக் கூறி அதனை ஏனைய கலாசாலைகளும் பின் பற்றவேண்டும் எனக் குறிப்பிட்டார். அதன்பின் அக் கூட்டத்தில் பங்குகொண்ட ஒவ்வொரு கலா சாலைகளும் இக் கொவிட்- 19 இடர் காலத்தில் இணைய வழியில் தாம் முன்னெடுத்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையினை காட்சிப்படுத்தி விளக்குமாறு கேட்கப்பட்டனர்.

சிங்களத்தில் அமைந்த அவரது உரையை கொட்டகல ஆசிரியகலாசாலை அதிபர் திருமதி சந்திர லேகா கிங்ஸ்லி அவர்களும் பிரதி அதிபர் திருமதி சுமதி அன்பரசு அவர்களும் தமிழில் மொழி பெயர்த்து உதவினர். அறிக்கை சமர்ப் பித்தல் வரிசையில் முதலில் நாம் எமது கலா சாலையின் செயற்பாட்டு அறிக்கையை சமர்ப்பித் தோம். அதில் இதுவரை காலமும் Zoom வழி எமது விரிவுரையாளர்கள் செய்த கற்றல் கற்பித் தல் செயற்பாடுகளின் விபரங்கள் அதில் நாம் எதிர்கொண்ட சவால்கள், மாணவர்கள் சார்பில் உள்ள பிரச்சினைகள் போன்ற விடயங்கள் முன் வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து அக்கூட் டத்தில் கலந்துகொண்டிருந்த நாட்டின் ஏனைய தமிழ், சிங்கள கலாசாலைகளின் அதிபர்கள் தத்தமது கலாசாலை சார்ந்த செயற்பாடுகளின் அறிக்கையை காட்சிப்படுத்தி விளக்கினர். அவர் களும் இதில் தாம் எதிர்கொள்கின்ற பல்வேறு நெருக்கடிகளை எடுத்துக் காட்டியதுடன் தமக்குத் தேவையான சில உதவிகளையும் வேண்டி நின் றனர். அவர்களின் சிங்கள மூலமான உரைகளும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன.

நிறைவாக ஆசிரிய கல்வித்துறையின் கல்விப் பணிப்பாளர் அவ் விடயங்களைப் பற்றி தமது கருத்துக்களை பகிர்ந்துகொண்டதுடன் நாட்டின் தற்போதைய சூழலில் தொடர்ந்தும் இணைய வழியிலான கற்பித்தலை முன்னெ டுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய துடன் இயன்றவரை அதற்கான உதவிகளையும் பெற்றுத்தருவதாக உறுதியளித்தார். அத்துடன் புதிய கல்வியாண்டில் இணைத்துக் கொள்ளப்பட இருக்கும் முதலாம் வருட ஆசிரிய மாணவர் களையும் Online மூலம் பதிவுசெய்து அவர் களுக்கான கற்றலையும் இணையவழியில் முன்னெடுக்க வேண்டும், எனக் குறிப்பிட்டதுடன் அனைத்து கலாசாலை விரிவுரையாளர்களுக் குமான Zoom இணையவழிக் கற்பித்தல் தொடர் பான பயிற்சியினை கோப்பாய் ஆசிரிய கலா சாலையினால் வழங்க முடியுமா எனக் கேட்டுக கொண்டார். அதற்கு நாம் சம்மதித்தோம். எமது கலாசாலையும் ICT விரிவுரையாளர்களின் உத வியுடனும் ஏனைய விரிவுரையாளர்களின் பங் களிப்போடும் இதனை முன்னெடுப்பதாக தீர் மானித்துள்ளோம். கோப்பாய் ஆசிரிய கலா சாலைக்கு கிடைத்துள்ள இப்பெருமைக்காக அர்ப்பணிப்போடு வழிகாட்டும் ஆசிரிய கல்வி நிர்வாகப் பிரிவின் பணிப்பாளர் கௌரவ ரத்னா யக்கா அவர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.



நிகழ்வின் நிறைவில் ஆசிரிய கல்வி நிர்வாகப் பிரிவின் பிரிதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பி.ஜி.ஐ. கெலனிஹேமாலி அவர்கள் நன்றியுரை ஆற்றினார். நிகழ்வில் பங்கேற்ற ஆசிரிய கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஏனைய ஆசிரிய கலாசாலை அதிபர்கள், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நெருக் கடியான இக்காலகட்டத்திலும் ஆசிரிய கல்வி யின் மேம்பாட்டுக்காக அனைவரும் சேர்ந்துழைப் போம் என்று கூறி உங்கள் எல்லோருடனும் அன்பு பாராட்டி மகிழ்வடைகின்றேன். இதற்கு எல்லாம் வல்ல நயினைநாக பூஷணி அம்மனின் பாதங்கள் பணிந்து வணங்குகின்றேன்.

# நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல்

## சிறு உசாவல்



21 ஆம் நூற்றாண்டு மனித வாழ்க்கைக்கு எண்ணற்ற வரப்பிரசாங்களை வாரி வழங்கியுள்ளது. இவற்றில் நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல் இன்று பலராலும் சிலாகித்துப் பேசப்படும் பொருளாகியுள்ளது. இப்போதனை முறையின் அறிமுகம் சில தசாப்தங்களுக்கு முன்னரே உருவாகியிருப்பினும் இதன் முக்கியத்துவம் இந்த 2020 ஆம் ஆண்டிலேயே உலகம் முழுவதும் உணரப்படும் நிலையைக் காணலாம்.

**அறிமுகம்** : 'கல்வி' என்பது இன்று 'கல்வியியல்' என நோக்கப்படுகின்றது. இதனால் கற்றல், கற்பித்தல் முறைகளும் ஆய்வுப் பார்வைக்கு உள்ளான ஒன்றாக இன்று முக்கியம் பெற்றிருக்கின்றது. இதில் 2019 பிற்கூற்றில் தன் அதிகாரத்தைப் பரப்பத் தொடங்கிய கொரோனாவைரஸ் (COVID19) 2020 இல் உலகளாவிய ரீதியில் தன்னாதிக்கத்தைச் செலுத்த, அதனை எதிர்கொண்டு நாளாந்த மனிதசெயற்பாடுகளைப் பாதிப்பின்றி முன்னெடுக்க கல்வித் துறையில் முக்கியம் பெற்றது நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல் ஆகும். Online என்பதன் தமிழ் வடிவமே நிகழ்நிலை. சாதாரணமாக, ஆசிரிய - மாணவ இடைவினை உறவுக்காகவும், கற்றல் கற்பித்தலுடன் தொடர்புடைய சாதனங்கள் மற்றும் ஆவணங்களின் பரிமாற்றத்திற்காகவும் இணையத்தில் முழுமையாகத் தங்கியிருக்கின்ற, பௌதிக ரீதியான எல்லைகள் எதனையும் கொண்டிராத கற்பித்தல் முறைமை' என இது வரைவிலக் கணப்படுத்தப்படும். இருக்கக் கூடிய பொருத்தமான சில வளங்களுடன் இலத்திரனியல் சாதனங்கள் துணைகொண்டு மேற்கொள்ளப்படும் ஒருபோதனை முறையாக அமைகின்ற இவ்வகைக் கற்பித்தலின் நோக்கும், போக்கும் இன்றைய காலத்தில் பல்பரிமாணங்களைக் கொண்டு விளங்குவது காணலாம். Google Meet, Zoom, Whats App, LMS என இதன் வகைகள் பலவாகக் காணப்படுகின்றன. இவ்வாறு பலதரப்பட்டவாறு இவற்றின் வகைகள் காணப்படுவதிலிருந்தே பல்வேறு நோக்கங்களிற்காக இவை பயன்படுத்தப்படுவதும் பல தளங்களில் இவற்றின் போக்குகள் அமைவதும் வெளிப்படையாகவே புலப்படுகின்றது. அதேபோல நெருக்கடிக்கு முகங்கொடுக்கும் ஒரு தீர்வாக பிரபல்யம் பெற்ற இந்நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பல்வேறு அனுகூலங்களையும், பிரதி கூலங்களையும் தன்னகத்தே கொண்டிருப்பதும் சிந்திக்க வேண்டியதும் ஆராயப்பட வேண்டியதும் ஆகும். இதில் அனுகூலங்கள் வெளிப்படையாகத் தெரிகின்றன. பிரதிகூலங்கள் நேரடியாகத் தெரிவதில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. இதனால் முதலில் அனுகூலங்களை சுருக்கமாக நோக்குவது பொருத்தமானது.

**ரஜிதா சின்னத்துரை**
**விரிவுரையாளர்**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**




**அனுகூலங்கள் :** நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல் என்பது ஆசிரியருக்கும், மாணவருக்கும் புதிய அனுபவங்களைக் கற்றுத்தருகிறது. யார் வேண்டுமானாலும் இச்செயற்பாட்டில் இணையமுடியும். இதனால் கட்டுப்பாடின்றி பல்வேறு நெறிகளைக் கற்கமுடியும். இணையத் தொடர்புடைய ஒரு கணினியுடன் இச்செயற்பாட்டை முன்னெடுக்க முடியும். எந்நேரத்திலும் இச்செயற்பாட்டை முன்னெடுக்கலாம். ஒப்பீட்டளவில் செலவு குறைந்த போதனை முறையாகக் கருதப்படுகிறது. கற்போர் கற்பிப்போர் என்ற இரு சாராருமே ஆடை புறத்தோற்றம் பற்றி அதிகமாகநேரம், பணத்தை செலவிட வேண்டியதில்லை. போக்குவரத்து நேரம், பணம் மிச்சம். மேற்குறித்த நோய்பரவல் முதலான நெருக்கடியான சூழ்நிலைகளில் அற்புதமான வளம் என்று சிறப்பிக்குமளவு இது முக்கியத்துவம் பெற்றுள்ளது.

**பிரதிகூலங்கள்:** இவ்வாறு நன்மைகள் பல இருப்பினும் கருதத்தக்களவு கணிசமான பிரதிகூலங்களும் இருக்கவே செய்கின்றன. யார் வேண்டுமானாலும் இணைந்து கற்கலாம் என்பது வாய்ப்பாக இருப்பினும் மறுபக்கமாக தேவையுடைய தரப்பிற்கு அதுசவாலாக அமையலாம். மேலும் குறைந்தபட்சம் அடிப்படை வசதியுள்ள ஒருவருக்கு இது சாத்தியம். இணைய வசதி, கணினி அல்லது கைபேசிவசதி இல்லாதவருக்கு இது எட்டாக்கனி. இது ஒருவருடைய நிதிநெருக்கீட்டை சமூகத்திற்கு வெளிப்படுத்துறது. குறிப்பிட்ட இச்சாதனங்கள் இருப்பினும் கற்போர் யாவரதும் வதிவிடங்கள் சிறந்த வலையமைப்பு வசதி கொண்டிருக்க வாய்ப்பில்லை. அதனால் ஒருவர் பெறும் கல்வியை அவரை ஒத்த இன்னொருவர் அந்நேரத்தில் பெறமுடியாதுள்ளது. இதனால் வலையமைப்பு பிரச்சினை (Coverage Problem) இங்கு முக்கியமாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

இன்று கற்றற் சூழல் என்பது முக்கியமான ஒன்றாகக்கருதப்படுகின்றது. ஒழுங்கு படுத்தப்பட்ட ஒருகற்றற் சூழல் கற்றல் கற்பித்தலுக்கு எவ்வளவு பொருத்தமாக அமைகின்றதோ அந்தளவிற்கு நிகழ்நிலை கற்றல் கற்பித்தலின் சூழல் பொருத்தமாக அமைவதில்லை. வெளிச்சத்தங்களின் இடையூறு, அருகிருப்போரின் விருப்பு வெறுப்புக்கள் என பலவிடயங்கள் இதில் செல்வாக்குச் செலுத்தும். இவ்விடத்தில், வளந்தோர் கல்வி யில் குடும்பச் சூழலில் செல்வாக்கு தனித்து ஆராயப்படுமளவிற்குப் பல ஆழமான விடயங்களைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. அதுபோல சகபாடிகள் என்ற விடயமும் சூழலுடன் தொடர்புடையது. நிகழ்நிலைக் கல்விச் செயற்பாடுகளில் கலந்துரையாடல், பகிர்ந்துகொள்ளல், தெளிவுபெறுதல், சந்தேகம் தீர்த்தல் முதலியவிடயங்கள் கேள்விக் குறியாகின்றன. இது ஒரு வகையில் உளநெருக்கீடு மன உளைச்சலை உருவாக்குகின்றது. போதனை முடிவில் திருப்தியானமன நிலையை இல்லாமல் செய்கின்றது. இதைவிட 40 நிமிடம் என்ற ஒரு பாடவேளை நேரம் என்பதைத் தாண்டி மணிக்கணக்காக பாடத்தை நடாத்துவது வளர்ந்தோர் கல்வியில் ஓரளவு பொருத்தமான தாயினும் பாடசாலை மாணவர்களுக்கு சலிப்புநிலையை ஏற்படுத்தும் காரணியாக அமைகின்றது. இந்த உளவியல் ரீதியான சவாலைக் கடந்து கண்களைப் பாதித்தல் முதலான உடலியல் ரீதியான பிரச்சினைகளும் உருவாகின்றன. சீரானநித்திரை முதல் சமநிலையும் பாதிப்படைகிறது. இம்முறைக் கற்றலில் விருப்பமின்மையை ஏற்படுத்துகின்றது.

இவற்றுக்கப்பால் நிகழ்நிலைக் கற்றல்




கற்பித்தல் அறிவியற் பாடங்களுக்கும் செயன்முறைப் பாடங்களிற்கும் எந்தளவு பொருத்தமாக அமைகிறது என்பது இங்கு முக்கிய பிரச்சினையாகிறது. செய்துபார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டியதும் நடனம், உடற்கல்வி போன்ற பயிற்சி செய்து கற்றுக்கொள்ள வேண்டியதுமான பாடங்களை இவ்வகைப் போதனை முறையில் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாத நிலைகாணப்படுகின்றது. நேரடிவகுப்பில் இருக்கும் கண்காணிப்பு நிகழ்நிலைவகுப்பில் இருப்பதில்லை. தொடர்பற்ற பலவிடயங்களுடன் மாணவர்கள் தொடர்பு கொண்டிருப்பதை இங்குகுறிப்பிடலாம். ஹெலிகொப்ரர் பேரன்ரிங் (Helihopter Parenting) என்பது இவ்விடத்தில் அழுத்தம் பெறுகின்றது. இது நன்மையாகவும் அமையலாம் தீமையாகவும் அமையலாம்.

பழமை என்னும் பெருமைக்கும் மரபுவரலாற்றுக்கும் நாம் முன்னிறுத்தும் பழங்குடி மக்கள் அண்மைக் காலத்தில் தான் சிறிது சிறிதாக நிறுவனமயப்பட்ட கல்விக்குள் வருகின்றனர். அத்தகைய பழங்குடிமக்களுக்கு நிகழ்நிலைக் கற்றல் விரோதியாகவே காணப்படுகின்றது. ஆய்வு நோக்கில் நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல் பற்றி நிகிதாதேபான்டே குறிப்பிடும் கருத்து இங்கு முக்கியமானது. லண்டனைச் சேர்ந்த அனுராதா பெனிவால் ஒரே காலத்தில் பிரித்தானியாவில் உள்ளவர்களுக்கும் இந்தியாவின் டெல்லியில் உள்ளவர்களுக்கும் செஸ் பயிற்சி கொடுக்கிறார். இதில் லண்டனில் இருக்கும் வசதிமிக்க மாணவர் வேகமாகப் பிடித்துக்கொள்கின்றனர், இந்தியாவின் தொலைதூரப் பகுதியில் இருக்கும் மாணவர் படிக்கும் நிலை அவ்வாறில்லை. வேறுபாடு இருப்பது இனங்காணப்பட்டது. இதனால் இக் கல்விமுறை ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும் என்கிறார்.

**முடிவுரை:** இவ்வாறு பல்வேறு அனுகூலங்களையும் பிரதி கூலங்களையும் உள்ளடக்கியதே நிகழ்நிலைக் கற்றல் கற்பித்தல். இது ஒரு மேலோட்டமான எழுத்து. இங்கு பிரதிகூலங்களில் குறிப்பிடப்பட்டவை தனித்து ஆராயப்பட வேண்டியன. கூர்ந்து நோக்கும் பொழுது, கல்வியியலாளர்

தொடர்ச்சி பக்-09

# தற்கால கல்வியில் வீட்டுப் பாடசாலை முறையின் அவசியம்



கல்வி வழங்கும் ஒழுங்கமைப்பில் 18 ஆம் நூற்றாண்டுகளில் முனைப்புப் பெற்று ஒன்றாகக் காணப்படும் வீட்டுப் பாடசாலை (Homeschooling) முறையானது பெரும்பாலான விருத்தியுற்ற நாடுகளில் நடைமுறையில் இருந்துவந்துள்ளது. தற்காலத்தில் நீண்ட காலமாக ஒரு சீர்நிலையில் இருந்துவந்த மாணுட அசைவியக்கத்தினை மாற்றியமைத்துள்ள கொரோண எணும் கொடியதொற்றினால் சிறார்களின் கல்வி தொடர்பில் உலகளாவிய ரீதியில் அச்சநிலை தோன்றியுள்ளதால் அதில் இருந்து மீழ்வதற்கான ஒருகல்விவழங்கும் ஒழுங்கமைப்பாக நாம் வீட்டுப் பாடசாலை முறைமையினை பின்பற்றுவது பொருத்தமாக அமைகின்றது. அதுபற்றிய சில விடையங்களை நோக்குவதாக இக்கட்டுரைஅமைகின்றது.

### வீட்டுப் பாடசாலை பற்றிய வரையறை

வீட்டில் உள்ள சிறார்களுக்கு வீட்டில் உள்ள பெற்றோர் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய ஆசிரியர்களால் வீட்டில் ஒழுங்கமைத்து வழங்கப் படும் கல்விமுறை.

பள்ளிக்கூடத்திற்கு வெளியே வீட்டில் ஒரு முறையான பள்ளிக் கட்டமைப்பை உருவாக்கி அங்கு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு வலுச்சேர்க்கும் ஒருமுறை.

பாடசாலைக் கல்வியைப் பலப்படுத்தும் வகையில் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டுதலின் கீழ் மாணவர்களுக்கான கற்றல் சூழ்நிலைகளையும் வாய்ப்புக்களையும் வழங்கும் ஒரு இடமாக வீட்டினைக் கருதுவது வீட்டுப் பாடசாலை எனவும் கருதப்படுகின்றது.

**அ.பாலச்சந்திரமூர்த்தி**
**விரிவுரையாளர்**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**



### வீட்டுப் பாடசாலைமுறையின் வரலாறு

பாடசாலை வகுப்பறைகளில் முறையான கல்வியை பெறமுடியாதவர்கள் வீட்டுக் கல்வியை நாடினர் இதன்படி பூர்வீக அமெரிக்கர்கள் 19 ஆம் நூற்றாண்டகளில் வீட்டுக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி ஊடாக கட்டாயக் கல்வியை நிறைவுசெய்தனர் 1960 ஆம் ஆண்டுகளில் ரூசஸ் ஜான் ருஸ்டுனி என்பவர் ஐக்கிய அமெரிக்காவில் வீட்டுக் கல்விக்கான பரிந்துரைகளை மேற்கொண்டார் இதைதத் தவிர அவுஸ்ரேலியா, கனடா, பிறேசில், இஸ்ரேல், தென்னாபிரிக்கா, சிலி, மெக்சிக்கொ, நீயுஸ்லாந்து, இந்தியா போன்ற நாடுகளிலும் இக்கல்விமுறை முழுமையாக அங்கிகரிக்கப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது

### வீட்டுப் பாடசாலை முறையின் இன்றைய தேவை

தற்காலத்தில் உலக நாடுகளில் ஏற்படும் எதிர்பாராத கொரோணாநோய் தொற்றுக்கள் மனித சமுகத்தின் இயலம்பான ஒன்றுகூடல்களுக்குத் தடையை ஏற்படுத்தியுள்ளது. உலகளாவிய ரீதியில் சுமார் 216 நாடுகளில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ள கொரோணா வைரஸ் காரணமாக சுமார்

---

**நிகழ்நிலைக் கற்றல்...**

களின் கருத்துக்களைச் சிந்திக்கும் பொழுது, மாணவர் பல்வகைமை என்பதைக் கருதும்பொழுது நிகழ்நிலைக் கற்றல் என்பது ஒரு தற்காலிக ஏற்பாடு என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. அதாவது எதுவுமே இல்லாத வேளையில் கிடைக்கும் இந்த ஒன்று ஏதோ பரவாயில்லை என்பதுவே யதார்த்தம். இந்த Something is better than nothing என்ற கருத்தியலைப் புரிந்துகொண்டால் கற்போர் கற்பிப்போர், பெற்றோர் விழிப்புடன் தேவையும் நோக்கமும் அறிந்து செயற்பட்டால் ஓரளவிற்கு பிரதிகூலங்களைத் தவிர்த்து அனுகூலங்களைப் பெறமுடியும்.

**உசாத்துணை:** www.bbc.com-india-53198344
www.shabdkosh.com



1.7 பில்லியன் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது. இவர்கள் யாவரும் வீட்டில் தங்கியுள்ளதுடன் இவர்களுக்கான மாற்றுக் கற்றல் ஏற்பாடாக தொழில்நுட்ப முறைகளைக் கொண்டு வீட்டில் இருந்து கற்பதற்கான ஏற்பாடுகளையே உலக வங்கி மற்றும் OECD என்பன பரிந்துரைத்துள்ளது. இன்றைய டிஜிட்டல் மயமான உலகில் மாணவர்களுக்கு வீட்டில் இருந்து பன்முக கல்வித் தொழில் நுட்பங்களான multiple education technology (radio, television, mobile phones, digital/ online tools, and print) என்பவற்றின் ஊடாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. இன்றையை இச்சூழ்நிலையில் பாடசாலைக் கல்வி முறையில் இடைவெளியை ஏற்படுத்தாத வகையில் வீட்டில் முடங்கியுள்ள மாணவர்களுக்கு வீட்டு பாடசாலை முறையை பின்பற்றி வீடுகளில் கல்வியை வழங்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்தியாவின் தமிழ்நாட்டில் கொரோணாத் தாக்கத்திற்குப் பின்னான காலங்களில் தமிழக பள்ளிக் கல்வித்துறை வீட்டுப் பள்ளித்திட்டத்தின் கீழ் டிஜிட்டல் முறை கல்வித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றது இதனூடாகக் கணினி, ஸ்மாட் போன், லெப்டொப், தொலைக்காட்சி, ரேடியோ போன்ற தொழிநுட்ப சாதனங்களின் வழியாக இக் கல்வி வழங்கப்பட்டு வருகின்றது இதனைவிட தீக்சா என்ற செயலி வழியாகவும் கல்வியை வழங்கத் தீர்மானித்துள்ளது.

எமது நாட்டிலும் சுமார் 43 லட்சம் மாணவர்களின் பாடசாலைக் கல்வி நடவடிக்கை கொரோணா வைரஸ் தக்கம் காரணமாக இந்த ஆண்டில் அதிக தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளது பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்கள் வீடுகளில் பாதுகாப்பாக இருக்கும் நிலையில் கல்வி அமைச்சு மாணவர்களின் கல்வி நடவடிக்கையில் கொண்ட கரிசனை காரணமாகத் தொலைக் கல்வி முறையின் ஊடாக கல்வியை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்துவருகின்றது இதற்காக தொலைக்காட்சி, வானொலி என்பவை பயன்படுத்தப்படுகின்றது. மாகாணக் கல்வித் திணைக்களங்கள் மற்றும் வலயக் கல்வித் திணைக்களங்கள், பாடசாலைகள் என்பனவும் நிகழ்நிலை மற்றும் சூம் செயலிகள், மைக்ரோசொவ்ற் ரீம் செயலிகள் என்பவற்றின் ஊடாக மணவர்களுக்கு கல்வியை வழங்கிவருகின்றன. இவை தவிர பிரத்தியே கவகுப்புக்களை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் ஆசிரியர்களும் இவ்வாறான கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் நிலையில் இக்கற்றல் நடவடிக்கைகளைப் பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு ஒழுங்கமைப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் ஏற்ற வகையில் வீட்டுப்பாடசாலை முறையின் பண்புகளைப் பின்பற்றுவது ஏற்புடைய ஒன்றாகக் கருதப்படலாம்.

## வீட்டுப் பாடசாலையை திட்டமிடும்போது கவனிக்கவேண்டியவை

*. இலங்கையில் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட பாடசாலை முறை காணப்படுவதால் எதிர்பாராத இடர்நிலைகளின் போது பாடசாலைகளும் வீடுகளும் ஒருமித்து இணைந்த வீட்டுப் பாடசாலை திட்டத்தினை ஒழுங்கமைத்தல் பொருத்தமானதாக அமையும் உதாரணமாக பெற்றோர், ஆசிரியர்கள், பாடசாலை,வீட்டுப் பாடசாலைக் குடும்பங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாக ஒழுங்கமைத்தல்.




*. வீட்டுப் பாடசாலைக்கு ஏற்ற கலைத் திட்டம் ஒன்றினைத் தயாரித்தல் இங்கு தேவையான பாடநூல்கள், பரிட்சை முறைகள், கற்பித்தல் சாதனங்கள், உபகரணங்கள் என்பவற்றினை திட்டமிடுக்கொள்ளுதல் இதன்போது பின்வரும் விடயங்களைக் கவனிக்கவேண்டும்

1) பிள்ளையின் எண்ணமும் விருப்பமும்
2) பிள்ளைகள் தொடர்பில் பெற்றோரின் மதிப்பீட்டுநிலை
3) ஆசிரியரின் வசதி வாய்ப்புகள்

*. வீட்டுப் பாடசாலை முறையில் பாடசாலை ஒன்றில் உள்ளது போன்ற நடைமுறை

களை பின்பற்றுதல் அதாவது ஒழுங்கான நேர சூசி ஒன்றினை பின்பற்றுதல், அதில் காலை ஆராதனை, நற்சிந்தனை உடற்பயிற்ச்சி, சுற்றுப் புறச் சுத்தப்படுத்தல் என்பவற்றுடன் நாளாந்தம் கற்கும் பாடங்களையும் திட்டமிடுதல் வேண்டும்.

*. மாணவர்களுக்குப் பொருத்தமான நிகழ் நிலை வகுப்புக்கள் மற்றும் தொலைக்காட்சி ஊடான வகுப்புக்கள், வானொலி ஊடான வகுப் புக்களைத் திட்டமிட்டு ஒழுங்கு செய்வதுடன் பிள்ளைகளை அதில் பங்குபெறச் செய்தல் மற் றும் அவற்றினை ஒழுங்காக மேற்பார்வை செய்தல்.

*. இடர்நேர்வு காலத்தில் பாடசாலை மட்டக் கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டு செயற்பாடுகள் இடம்பெறாத விடத்தும் பெற்றோர் இயன்றவரை மாணவர்களை நிகழ்நிலைப் பரிட்சைகளில் பற்கு பெற வைத்தல் மற்றும் மதிப்பீட்டு வினாப்பத் திரங்கள் அதற்கான விடைகளை பெற்று வீட்டு மட்டத்தில் கணிப்பீடு மற்றும் மதிப்பீடுகளை ஒழுங் கமைத்தல்.

*. வீட்டு மட்டத்தில் குடும்ப உறுப்பினர்கள், மற் றும் அயல் வீட்டில் பாடங்களை கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள், பெற்றோர்கள், மூத்த வகுப்பில் கற்கும் மாணவர்களை ஒன்றுதிரட்டிய வகையில் வீட்டில் உள்ள பிள்ளைகளுக்கு கற்பிப்பதற்கான ஆசிரியர் வளங்களை ஒழுங்கமைத்தல்.


*. வீட்டுப்பாடசாலை முறையில் கற்பதற் கான இடத்தினை மாணவர் விருப்பத்துக்கு ஏற்ப மாற்றுதல் உதாரணமாக வீட்டில் உள்ள பூந் தோட்டம், அருகில் உள்ள விளையாட்டு மைதா னம், வீட்டுத்தோட்டம், கடற்கரை எனப் பொருத் தமான இடத்தினைத் தெரிவுசெய்தல்.

*. வீட்டுப் பாடசாலை குழுக்களை உருவாக் குதல் பல வீட்டுப் பாடசாலைக் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து நவீன தொடர்பாடல் ஊடகங்கள் ஊடாக குழுக்களை உருவாக்கி கற்றல் கற்பித் தல் மற்றும் பாடம் தொடர்பான சந்தேகங்கள், உதவிகள் என்பவற்றை பரிமாறிக் கொள்ளுதல் உதாரணம். வட்ஸ் அப், வைபர், மூலமான குழுக் களைக் உருவாக்குதல்.

*. தமது பிள்ளைகளுடன் சமாந்தர வகுப் பில் கற்கும் மாணவர்களுடன் சந்திப்புக்களை தொடர்புசாதனங்கள் ஊடாக ஒழுங்குபடுத்துதல். இதன்மூலம் மாணவர்களின் சகபாடிக் கற்றல் மற்றும் சமனிலையான இடைத்தொடர்புகள் என் பன மேன்மை அடையும்.

*. வீட்டுப்பாடசாலை முறையை வலுப்ப டுத்த தேவையான வாரராந்த, நாளாந்த பத்திரி கைகள், கதைப்புத்தகங்கள் மற்றும் தொலைக் காட்சி நிகழ்சிகள், வானொலிச் செய்திகளை, Webinar series என்பவற்றைக் கேட்பதற்கும் பார்ப் பதற்கும் வசதிகளை ஏற்படுத்துதல்.

*. வீட்டுப் பாடசாலை முறையில் பெற்றார் மற்றும் வீட்டில் உள்ள உறுப்பினர்கள் ஈடுபடும் தொழில்கள் மற்றும் நாளாந்தச் செயற்பாடுகள்





ஊடாக நேரடி அனுபவங்களைப் பெறுவதற்கான வசதிகளை ஒழுங்கமைத்தல்.

*. சிறார்களை வீட்டில் பல்வேறு ஆக்கச் செயற் பாடுகளில் ஈடுபடத் தூண்டுதல் சித்திரம், கழிவு களைக் கொண்டு ஆக்கங்களைத் தயாரித்தல், தையல், கவிதை. கட்டுரை போன்ற ஆக்கச் செயற் பாடுகளைத் திட்டமிடுதல் இவற்றை நிகழ்நிலை போட்டிகளில் பதிவிடுவதன் மூலம் மாணவர்களின் ஆற்றலை அதிகரித்தல்.

*. வீட்டுப் பாடசாலை முறையில் பெற்றோர் மற்றும் சிறார்கள் என்போர் ஒன்று சேர்ந்து பல் வேறு விளையாட்டுக்களில் ஈடுபடும் வகையில் ஒழுங்கமைத்தல் சதுரங்கம், கரம், மற்றும் பாரம் பரிய விளையாட்டுக்களான நாயும் புலியும், கெந் திக்கோடு, போன்ற விளையாட்டுக்களை ஒழுங் கமைத்தல்.

*. வீட்டுப் பாடசாலைமுறையினை ஒழுங் கமைக்கத் தேவையான ஆலோசனைகளை பெறுவதற்காக வீட்டுப் பாடசாலை கூட்டங்களை (homeschool meeting) நடத்துதல்.

**வீட்டுப் பாடசாலை முறையின் அனுகூலங்கள்**

*. பெற்றோர் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் போது தாமும் பாடவிடயங்களைப் புரிந்து தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

*. மாணவர்களின் கற்றல் விடயங்களில் இரட்டைக் கட்டுப்பாட்டுத் தன்மை ஏற்படுகின்றது ஒன்று பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல் விடயங்களைக் கண்காணித்தல் இரண்டா வது பெற்றோர்களால் கண்காணித்து அதற்கான பரிகாரங்களைத் தேடுதல்.

*. பாடசாலைக் கல்வி முறையில் அதிர்ச்சி உற்ற பெற்றோர்கள் வீட்டுக் கல்வி முறையை ஒழுங்கமைப்பதன் மூலம் பிள்ளைகளின் அடைவு மட்டத்தினை உயர்த்த உதவும்.

*. பிள்ளையின் விருப்பத்தினைக் கேட்ட றிந்து அதற்கேற்ப பாடவிடயங்களை ஒழுங்க மைக்க உதவும்.

*. பிள்ளைகளை சுயகற்றல் முறை ஒன்றினை நோக்கி வழிப்படுத்த உதவும்

*. பிள்ளைகள் தமக்குப் பழக்கப்பட்ட சூழ லில் கற்பதற்கு விருப்புடன் ஈடுபடும் சந்தர்ப்பம் ஏற்படும்.

*. இடர் நேர்வுகளின் போது ஏற்படும் ஆபத் துக்கள், மேலதிக பிரயாணநேரம், மற்றும் பிழை யான தொடர்புகள் என்பவற்றைத் தவிர்ப்பதற்கும் பிள்ளையின் பிற்காலத்தை வலுவுள்ளதாக்கவும் உதவும்.

*. பெற்றோரின் நேரடி மேற்பார்வைக்கு உட் படுவதல் பிள்ளையின் நலிவு, வலிவு என்பவ ற்றை அறிந்துகொள்ள வழிவகுக்கும்.

*. வீட்டை ஒரு கற்றல் சூழல் மிக்க இடமாக மாற்றுவதற்கு வழிவகுக்கும்.

*. பிள்ளைகளிடையே முறையில் கல்வி முறை விருத்தியடைவதற்குச் சந்தர்ப்பம் ஏற்ப டும்.

*. பிள்ளையிடத்தே சமுகத் தொடர்புகள் அதிகரிக்கும்.

**முடிவுரை**

வீட்டுப் பாடசாலை முறை ஒழுங்கமைந்த பாடசாலைக் கல்விக்கு நிகரான ஒன்று என்பது இலங்கை போன்ற நாடுகளுக்கப் பொருந்தக் கூடியது அல்ல எனினும் பள்ளைகளின் கல்வி மீது பெற்றோரின் ஈடுபாடு அதிகரிப்பதனால் அதனை ஒரு ஒழுங்கமைந்த முறைமைக்குள் கொண்டுவருவதற்கும் மற்றும் எதிர்பாராத இடர் நேர்வுகளின் போதும் பாடசாலைக் கல்விக்கு வலுச்சேர்க்கும் ஒருமுறையாக நாம் இணைந்த வீட்டுப் பாடசாலை முறையைக் கட்டி எழுப்புவது பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்களிப் பையும் கரிசனையையும் மேலும் அதிகரிக்கச் செய்யும் ஒன்றாக இருப்பதுடன் தற்போதய பன் முக கற்றல் தொழில்நுட்பத்தில் ஈடுபடும் பிள்ளை களை நிர்வகிக்கவும் மேற்பார்வை செய்யவும் தற்காலத்தில் இதன் அவசியம் தேவையான ஒன்றாகவே அமையும்.

# இணையவழி கற்றலுக்கான தேவைப்பாடும் அதிகரிப்பும்

நிவேதிகா சத்தியசீலன்
ஆசிரிய மாணவி
தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
சிறப்பு பிரிவு



மின் கற்றல் என்பது மின்னணு தொழில்நுட்பங்கள் மற்றும் வளங்கள் மூலம் அறிவைப் பெறுவதற்கான செயல்முறையாகும். இணைய பயனர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பு அதி நவீன ஆன்லைன் கற்றல் படிப்புக்களுக்கான சந்தை தேவையை அதிகரித்துள்ளது. மின் கற்றல் சந்தை அளவு 2019 ஆம் ஆண்டில் 200 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியது. 2020 இற்கும் 2026 இற்கும் இடையில் 8% CAG ஆல் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. Cloud கம்பியூட்டிங் மற்றும் AI போன்ற பல புதிய தொழில்நுட்பங்களின் வருகையும் உலகம் முழுவதும் இணைய ஊடுருவலை அதிகரித்திருக்கின்றது. மேம்பட்ட ஒன்லைன் கற்றல் அனுபவத்திற்கான முதன்மை தேவை வலுவான நெட்வேர்க் இணைப்பு. 5G தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் டிஜிட்டல் சூழலில் தடையற்ற பயிற்சி மற்றும் கற்றலை எளிதாக்கும்.

வரலாற்றில் கொரோனா வைரஸ் தொற்று நோய் கல்வி முறைமையில் பாரிய தாக்கத்தை தோற்றுவித்திருக்கிறது. இது அனைத்து கண்டங்களிலும் 190 இற்கும் மேற்பட்ட நாடுகளில் கிட்டத்தட்ட 160 கோடி மாணவர்களை பாதித்துள்ளது. பாடசாலைகள் மற்றும் பிற கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டிருப்பதனால் உலகின் மாணவர் தொகையில் 94%மானோர் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். குறைந்த மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளில் 99% மானோரின் கற்றல் நடவடிக்கைகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஆனாலும் “மனமிருந்தால் இடமுண்டு” என்று பெரியவர்கள் கூறுவார்கள். உண்மையில் அனைவரும் புதிய தொழில்நுட்ப வளர்ச்சியின் பாதையில் செல்வதற்கான தருணம் ஏற்பட்டுள்ளது. இணையம் உலகத்திலுள்ள அனைத்து நாடுகளினதும் செய்திகளை விரல்நுனிச் சொடுக்கில் அறிய உதவுவதோடு மருத்துவம், சுகாதாரம், அஞ்சல் போன்ற பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திலும் முக்கிய பங்கை உருவாக்கியுள்ளது. தற்போது இணையவழிக் கற்பித்தல்முறை பரவலாகிவருகின்றது. ஆரம்பத்தில் எவ்வாறு இணையத்தில் படிக்க முடியும் என்ற கேள்வி எம்மில் பலருக்கு ஏற்பட்டிருந்தாலும் தற்போது இணையமூடாக ஆயிரக்கணக்கான கற்கை நெறிகளை நாம் மேற்கொள்ளமுடியும் என்ற எண்ணம் தோன்றியிருப்பதையும் பலர் இணையமூடாக கற்கை நெறிகளை மேற்கொள்வதையும் காண முடிகின்றது. இக்கற்பித்தல் முறை வெறும் வகுப்பறைக் கற்பித்தல்போல் ஆசிரியரிடமிருந்து மாணவர் கற்கும் ஒரு வழிப்பாதையாக மட்டும் அமையாமல் பல்வழிப்பாதை கொண்ட முழுநிறைவு கொண்ட கற்பித்தல் முறையாக விளங்குகின்றது. இக் கற்பித்தல் முறையில் தேவையான இடங்களில் பேச்சுரைகள், புகைப்படங்கள், அசைவுப்படக் காட்சிகள், செயல்முறை விளக்கங்கள், சோதனைச் சாலைச் செய்முறைகள், பாடத்தோடு தொடர்புடைய பிற வலைத்தளங்களைப் பெறல்



போன்ற பலவழிக் கற்பித்தல் முறைகளை கை யாண்டு கற்பிக்க முடிகின்றது.

சவால்களை எதிர்கொள்ளாமல் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. பாரம்பரிய நடைமுறையிலி ருந்து இணையத்தளமொன்றிற்கு கல்வித்துறை யில் முன்னுதாரணமான மாற்றத்தைக் கொண்டு வர அனைவருக்கும் இது ஒரு வாய்ப்பாக அமைந் துள்ளது. ஆனால் மேம்பட்டு வரும் தொழில்நுட் பத்துடன் கல்விக்கான பாரம்பரிய அணுகுமுறை யை சமநிலைப்படுத்த வேண்டியதொரு சவால் இருப்பதையும் நாம் புறக்கணித்துவிட முடியாது. தற்போதைய சூழ்நிலையில் பயனுள்ள இணைய வழி வகுப்பை உருவாக்குவதற்கான ஒரேவழி பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர் களிடையே நெருக்கமான இணக்கப்பாட்டை உறு திப்படுத்துவதாகும். இவர்களிடையே சமமான ஒரு பொறுப்பை பகிர்ந்துகொள்ளும் ஒரு கூட்டு முயற்சியே இணையவழிக் கல்வியாகும். முன் னெப்போதையும்விட இப்போது கல்வியில் பெற் றோரின் ஈடுபாடும் கற்றல் விடயங்களை அறிந்து கொள்வதில் அவர்கள் ஈடுபடுவதும் அதிகரித்தி ருக்கிறது.

அதே சமயம் ஆசிரியரின் பங்களிப்பானது நேருக்கு நேர் மேற்கொள்ளப்படும் பாரம்பரிய போதனைகளைப் போல இணையமூடான கற்பித் தலில் இருக்கமாட்டாது என்ற எண்ணப்பாடும் உள்ளது. ஆனால் இணையவழி வகுப்பை திறம் பட நடத்துவதற்கான முக்கிய பங்கு ஆசிரியரு க்கு உண்டு. அறிவு, தொழில்நுட்பம் மற்றும் மாணவர்களை ஒன்றிணைப்பதே ஆசிரியர்களுக்கு இதில் உள்ள முக்கிய சவாலாக காணப்படுகின் றது. ஆசிரியர்களும் இணையவழி வகுப்பில் இணைந்து கற்பவராக இருக்கவேண்டும். ஏனென் றால் எந்தவொரு இணையமூடான வகுப்பையும் எடுப்பதற்கு முன்பு ஆசிரியர்கள் தங்களை முத லில் பயிற்றுவிக்க வேண்டியுள்ளது. வகுப்பு பாடத்திட்டங்கள், கற்பித்தல் கற்றல் முறையின் தேர்வு, மதிப்பீடு மற்றும் வெவ்வேறு இணைய வழிக் கற்பித்தல் கற்றல் கருவிகளின் பயன்பாடு ஆகியவை பற்றி தெளிவாக அறிந்திருப்பது





ஆசிரியரின் அடிப்படை பொறுப்புக்களாகும்.

இந்தப் பொறுப்புக்களைத் தவிர ஆசிரிய ர்கள் மாணவர்கள் உளவியலைப் புரிந்துகொண்டு இணையவழி வகுப்பில் அவர்களை பங்கேற்க ஊக்குவிக்க வேண்டும். ஒவ்வொரு மாணவரும் வகுப்பில் பங்கேற்கிறார்களா இல்லையா என் பதை ஆசிரியர் அவதானிக்க வேண்டும். பொறுப் புணர்வை மாணவர்களுக்கு புகட்டுவதற்கு ஆசிரி யர் பல்வேறு வேடிக்கையான விளையாட்டுக் களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியும். மாணவர்கள் இணையமூடாக கற்பவர் களாக இருக்க வேண்டுமானால் ஆர்வம் மிகவும் அவசியம். மாணவர்கள் எப்போதுமே அதிகள வுக்கு அறிவைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வ மாக இருக்கவேண்டும். மாணவர்கள் குறிப்புக் களை எடுத்துக் கொள்வதற்கும் படிப்பதற்கும் தயார் நிலையில் இருக்கவேண்டும். பாடம் குறி த்து ஆசிரியரிடம் கேள்விகேட்கத் தயங்கும் மாண வர்கள் அவர்கள் தனிப்பட்ட அரட்டைப் பெட் டியை பயன்படுத்தலாம். அவர்கள் தங்கள் பிரச்சி னைகளைத் தட்டச்சு செய்து ஆசிரியருடன் வசதியான முறையில் தொடர்புகொள்ளலாம்.

அதேவேளை வளர்ச்சியடைந்த நாடுகளில் இணையவழிக் கல்வி பாடசாலை மாணவர்கள் உட்பட சகல மாணவர்களுக்கும் இலகுவானதாக அமையும். இ-கற்றல் என்பது கனடாவின் கல்வி அமைச்சின் ஒரு முக்கிய திட்டமாகும். இது மாண வர்களின் பலம், தேவைகள் மற்றும் ஆர்வங் களின் அடிப்படையில் அவர்களின் கல்வியைத் தனிப்பயனாக்க கூடுதல் தேர்வுகளை வழங்குகி றது ஆனால் இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் பெரும்பாலான மாணவர்கள் வீடு களிலிருந்தவாறு கணினிகள் அல்லது பிற தொடர் புடைய சாதன வசதிகளற்றவர்களாகவே இருக் கின்றனர் என்பதே உண்மை. இந்நிலையில் இலங் கையில் மாணவர்களைத்தொடர்ச்சியாக கற்ற லின்பால் வைத்துக்கொள்வதற்காக கல்வியுடன் தொடர்புடைய நிறுவனங்கள் இணையவழிக் கற் றலை நடாத்துகின்றன. இருந்தபோதிலும் இத

தொடர்ச்சி பக்-15



# 2017 - 2018 கல்வியாண்டுக்கான கலாசாலை இறுதிப் பரீட்சையில் உயர் பெறுபேற்றினைப் பெற்ற

## கணிதத்துறை ஆசிரியர் தர்சனுடனான செவ்வி

*செவ்விகண்டவர் இளங்கீரன், ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவர்*



**இளங்கீரன்:** வணக்கம் தர்சன் சேர். கலாசாலைக் குப் பெருமை சேர்க்கும் வகையில் அண்மையில் வெளிவந்த கலாசாலைகளுக்கான இறுதிப் பரீட் சையில் கணிதத் துறையில் 13 ஏ 1 பி பெறுபேற் றைப் பெற்றுள்ளீர்கள். முதலில் உங்களுக்கு எங் கள் அணி சார்பாக வாழ்த்துகள். தற்போது கல்வி கற்கும் எம்போன்றவர்களுக்கு ஒரு பாடமாக உங்கள் வெற்றிக்குப் பின்னால் உள்ள விடயங் களை அறிய விரும்புகின்றோம். முதலில் உங்க ளைப் பற்றிக் கூறுங்கள்.

**தர்சன்:** மலையக நகரங்களில் ஒன்றான பண்டா ரவளையிலிருந்து 5 km தூரத்தில் அமைந்துள்ள அழகிய தேயிலைத் தோட்டங்களைக் கொண்ட மல்வத்தை என்பதே எனது சொந்த ஊர். எனது குடும்பமானது அப்பா நடேஷன், அம்மா நகு லேஷ்வரி, தம்பி துஷாந்தனை கொண்ட சிறிய குடும்பமாகும். அப்பா தேயிலைதோட்ட தொழிற் சாலை உத்தியோகத்தராகக் கடையாற்றி ஒய்வு பெற்றவர். எனது தம்பி கல்வி அமைச்சின் வெளி யிட்டு திணைகளத்தில் பாடசாலைகளுக்கான பாடநூல் தட்டச்சு செய்யும் பணியில் ஈடுபட்டுள் ளார். எனது பெற்றோர் ஆரம்பம் முதலே எனது கல்வியிலும் எனது தம்பியின் கல்வியிலும் அதீத அக்கறை யினை காட்டினார்கள். நான் எனது சாதாரண தரம் வரை யிலான கல்வியினை பது/ஊவா ஹைலண்ட்ஸ் கல்லூரியிலும், உயர்தர கல்வியினை கணிதப் பிரிவில் பது/சரஸ்வதி தேசிய கல்லூரியலும் பயின்றேன். முதல் தடவையில் உயர்தரத்தில் நான் தோல்வியினைத் தான் தழுவினேன். எனி னும். 2012 ஆம் ஆண்டு இரண்டாம் முயற்சியில் சித்திபெற்றேன்.

காலங்கள் உருண்டோடின 2014 ஆகஸ்ட் மாதமளவில் அரசாங்க வரத்தமானியில் வெளி யான ஆசிரியர் உதவியாளர்களுக்கான போட்டி பரீட்சை பற்றி எனது தம்பி மூலம் அறிந்தேன். வீட்டில் பெற்றோரின் விருப்பத்திற்மைய போட் டிப் பரீட்சைக்குத் தோற்றி அதில் வெற்றியும் பெற்று 2015.05.19 அன்று தகவல் தொடர்பாடல். உதவி ஆசிரியராக பது/சென்ஜேம்ஸ் தமிழ் வித்தியாலயத்திற்கு நியமனம் பெற்றேன். இங்கும் என்னுடன் தொற றிக்கொண்டது தகவல் தொர்பாடல் பாடமே கணி தத்திற்கு விண்ணப்

தொடர்ச்சி பக்-15

**இணையவழிக் கற்றலுக்கான...**

னைப் பயன்படுத்துவதில் பல்வேறுபட்ட சவால் களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. குறிப்பாக கிராமங்களில் இருந்து புலம்பெயர்ந்து நகர மாநகரங்களை நோக்கி வந்த ஏழை மாணவர் களின் எதிர்காலக் கல்வி பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. கொரோனா வைரஸ் ஏற்படுத்தி வரும் பெரும் பாதிப்புக்களில் கல்வித்துறைக்கு ஏற்பட்டு வரும் பின்னடைவு மிகவும் அதிகம். இந்நிலையில் இந்த விடயத்தில் அரசாங்கத்தின் தலையீடு அவசியம். சமூகத்தில் சகல மாணவர் களும் கல்வியை இடையூறின்றி தொடர்வதை உறுதிப்படுத்துவதே தற்போதைய தேவைப்பாடு. சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் தங்கள் கடை மையை நேர்மையாக நிறைவேற்றினால் நேருக்கு நேர் வகுப்பறையில் கற்றலுக்கு சமமானதாக இணையவழி படிப்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆனால் சிறிய வகுப்பு பிள்ளைகளு க்கு உகந்ததாக இருக்காது. அனைவருக்கும் உண்மையில் இணைவழிக் கல்வி புதியது. பிரத்தியே சூழல் வழங்கப்பட்டால் மாணவர்கள் இணையமூடான வகுப்புக்களில் சிறப்பாக கற்க முடியும் ஆனால் வளர்ந்து வரும் நாடுகளில் இணையவழிக்கல்வி முறை பாடசாலைக் கல் வியை பொறுத்தவரை சாதகமான பெறுபேற்றைத் தருமென எதிர்பார்க்க முடியாது.

பித்தபோதும் நியமனம் கிடைக்கப்பெறாதது வேதனையளித்தது. எனினும் பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடும்போது டியுஷன் வகுப்புகள் மூலம் கிடைக்கபெற்ற அனுபவம் பெரிதும் உதவியாக இருந்தது.

இந்நிலையில் ஆசிரியர் பயிற்சினை பெற்றுகொள்ளவேண்டிய நிலை நியமனத்தின் அடைப்படையில் இருந்தது. 2016/2017 கல்வியாண்டிற்கு ஆசிரியர் கலாசாலைகளுக்கு விண்ணபித்தபோதும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்கு விண்ணப்பிப்பதற்கு எந்த ஒரு கலாசாலையிலும் கற்கைநெறி இருக்கவில்லை. ஆகவே அழகப்பாபல் கலையில் BSc(Maths) பட்டத்தை பெறுவதற்கான செயற்பாடுகளை முன்னேடுத்து இருந்தேன். இதற்கிடையில் 2018/2019 ஆண்டிற்கு ஆசிரியர் கலாசரலைக்கு விண்ணப்பிக்க. இவ்விண்ணப்பங்களை பூரணப்படுத்தி மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் கையொப்பமிட வாய்ப்பு கிடைத்தபோது எனது உயர்தர கணித பிரிவின் அடைப்படையில் பெற்ற சித்தியினைகொண்டு கணித பாடத்திற்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு கலாசாலை வாய்ப்புக்காக காத்திருந்த எனக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சினை பெறும் அதிர்ஷ்டமான வாய்ப்பு கிடைக்கபெற்றது.



**இளங்கீரன்:** மிக நீண்ட தூரம் பயணம் செய்து கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு வருகை தந்திருந்தீர்கள். கோப்பாயில் பெற்ற அனுபவங்கள் உங்கள் வாண்மை விருத்தியில் எவ்விதம் செல்வாக்குச் செலுத்தின?

**தர்சன்:** முதலில் யாழ்ப்பாணம் என்ற உடன் ஒருபீதி இருந்தது. எங்கள் மலையக மொழிநடைக்கும் யாழ் மொழிநடைக்கும் உள்ள வேறுபாடு, யாழ் சூழல் முற்றிலும் வேறுப்பட்டது. அங்கு எனது 2 வருட பயிற்சினை சுதந்திரமாகவும் ரம்யமாகவும் பெறமுடியுமா? என்ற ஐயத்துடன் கலாசாலை அனுமதி நாளுக்காக யாழ்ப்பாணத்திற்கு எனது நண்பர்களுடன் வந்தேன். முதல்நாள் கலாசாலை வந்தவுடன் இதற்குமுன் பழகிய எங்கள் ஊர் சகோதரர்கள் (2016/2017 மாணவர்கள்) எங்களை வரவேற்றனர். சற்று பயம் நீங்கியது பின் திசைமுகப்படுத்தல் செயற்பாடு ஒவ்வொரு நாளும் புதுப்புது முகங்கள் மதிப்பிற்குரிய விரிவுரையாளர் பெருந்தகைகளைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியது. கணித நெறியில் எனக்கு முத்தான 20 ஆசிரியர் நண்பர்கள் கிடைத்தானர். எனது வகுப்பு விரிவுரையாளராக திரு த.தவசேகர்சேர் நியமிக்கபட்டிருந்தார். எளிதில் கோபப்படமாட்டார். அன்பாகப் பழகக்கூடியவர்.

கற்கை நெறியில் என்னுடன் இணைந்த எனது சக நண்பர்கள் சகோதர, சகோதரிகளாகவே மாறிவிட்டனர். அன்புடன் ஒரு குடும்பமாகவே கலாசாலை சூழல் பின்னிப் பிணைந்திருந்தமையால் அது எனது கற்றலையும், கலாசாலையில் மேலதிக பாடஇணைச் செயற்பாடுகளையும் மேலும் வெற்றிகரமாக மாற்ற பலப்படுத்தியது. எனது அறைத்தோழர்கள் (Roommates) சேர்ந்து சகபாடிக் கற்றலை மாலைவேளைகளிலும், அதிகாலை வேலைகளிலும் மேற்கொண்டமை மேலும் கலாசாலை இறுதிப் பரீட்சையில் சிறந்தபெறு பேறு (13A, 1B) பெறவும் உதவியாக இருந்தது.

**இளங்கீரன்:** கலாசாலையில் உங்கள் கல்விச் சூழல் பற்றிக் கூறுங்கள்.

**தர்சன்:** கலாசாலையில் ஆசிரிய பயிற்சியை மேற்கொண்ட எனக்கு கணிதபாட விரிவுரையாளர்களான திரு தவசேகர் சேர், திரு.ராஜபாலன் சேர், திரு அனந்தசயனன் சேர் மூலம் கணிதபாட அறிவுதிறன் சிறப்பான முறையில் போதிக்கப்பட்டது. வேண்டிய நேரங்களில் வகுப்பிலுள்ள அனைவரும் கலாசாலை நேரம் தவிர்ந்த வேளைகளிலும் சமூக வலைத் தளங்களினூடாக கற்றலுக்கான பாட விடயங்கள், சந்தேகங்களைக் கேட்டறியக் கூடிய வகையில் மிகவும் சுதந்திரமான முறையில் அக்கறையுடன் எனது விரிவுரையாளர்கள் பழகினார்கள். மற்றும் கணிதபாட கற்பித்தல் முறைமையினை கற்பித்த செல்வி செல்வமலர் அம்மாவிடமும், விஞ்ஞானபாட கற்பித்தல் முறைமையினை கற்பித்த திரு.சற்குணநாதன் சேரிடமும் கற்றல் கற்பித்தல் நுட்பங்களை கற்றுக்கொண்டு அவற்றை பாடசாலைகளுக்கான ஆசிரியர் பயிற்சின்போது நடைமுறைப்படுத்தி பல நாள்களில் சிறப்பான பாராட்டுகளை யாழ் பாடசாலை ஆசிரியர்களிடமும் கலாசாலை விரிவுரையாளர்களிடமிருந்தும் பெற பெரும் உதவியாக அமைந்தது. மேலும் இரசாயனவியல், உயிரியில்

பாடங்களை கற்பித்த திரு சேந்தன் சேர் குறுகிய காலம் கற்பித்தாலும் கலாசாலை இறுதி பரீட்சையில் விஞ்ஞான பாடத்தில் சிறந்த பெறுபேறு பெற பெரிதும் உதவியது.

மேலும் தொழில்சார் பாடமான கல்வி உளவியலை மிகவும் இலகுவாகவும் அதிகமான குறிப்புகளை வழங்காது அவரே சுருக்க குறிப்புகளை தயார் செய்து, நேரடி உதாரணங்களையும் கொண்டு பெரிய எண்ணக் கருக்களையும் மிகவும் எளிமையாக கற்பித்த கலாசாலையின் பிரதியதிபர் திரு லலீசன் சேர் மூலமும் மற்றுமொரு தொழில்சார் பாடமான பாடசாலை அடிப்படைகளும் கல்வி முகாமைத்துவம் பாடத்தை வாழ்வியியல் உதாரணங்களுடன் ஒப்பிட்டும் காலை, மாலைநேர வகுப்புகளையும் நடாத்தி மாணவர்களின் மனதில் நீங்கா இடம் பெற்றவர் உப அதிபர் திரு.கோபாலகிருஷ்ணன் சேர் ஆவர். மற்றும் ஏனைய துணைப் பாடங்களை சிறப்பாக கற்பித்து சிறந்த பெறுபேற்றைப் பெற உதவிய அனைத்து விரிவுரையாளர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். எங்கள் கற்றல் முயற்சிகள் சிறப்படைய ஒத்துழைப்பு வழங்கிய அதிபர் திரு கருணலிங்கம் சேருக்கும் எமது நன்றிகள்.

**இளங்கீரன்:** தற்போது கலாசாலையில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**தர்சன்:** தற்போது கலாசாலையில் பயிலும் ஆசிரிய நண்பர்கள் பாடங்களை மனனம் செய்யாது அன்றாட வாழ்வியல் அனுபவத்துடன் பொருத்தியும் கற்றல் கற்பித்தலை சகபாடிகளுடன் சிறப்பான இடைத்தொடர்பை மேற்கொள்வதன் மூலமும் சந்தேகங்களுக்கான தீர்வுகளை உடனே விரிவரையளார்களிடம் தயங்காது கேட்டறிவதன் மூலமும், சிறந்த பேறுபேற்றை எவராலும் பெறமுடியும். மேலும் கடந்தகால வினாவிடைத் தொகுப்பானது பெறுபேற்றை பட்டைதீட்டுவதற்கு உதவியாக இருக்கும். இவற்றை செவ்வனே கைக்கொண்டால். நிச்சயம் அனைத்துப் பாடங்களிலும் A சித்தியினை பெறலாம்.

**இளங்கீரன்:** நீங்கள் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆகியதோடு விஞ்ஞானமாணி பட்டத்தையும் பெற்றுள்ளீர்கள். இது பற்றிக் கூறுங்கள்.

**தர்சன்:** நான் யாழ்ப்பாணத்தில் கலாசாலையில் பயின்ற சமகாலத்திலேயே BSc(Maths) பட்டத்தையும் பெற்றுக்கொள்ள மேற்கூறப்பட்ட உத்திகள் பேருதவியாக இருந்தது. விஞ்ஞான மாணி பட்டத்தை வெளிவாரியாகவே மேற்கொண்டேன். இச்செயற்பாடானது எனது கலாசாலை கற்றல் வாண்மை விருத்தி செயற்பாட்டில் எவ்வித இடையூறையும் ஏற்படுத்தவில்லை. இதற்கிடையில் ஆங்கில டிப்ளோமா பாடநெறி ஒன்றினையும் யாழ்ப்பாணத்தில் இருந்த காலப்பகுதியில் சனி ஞாயிறு தினங்களில் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

**இளங்கீரன்:** அண்மைய கலாசாலை வரலாற்றை எடுத்துக் கொண்டால் கற்கைநெறி பூர்த்தி அடைந்த பின்னர் மிக நீண்ட காலத்தின் பின்னரே பரீட்சைத் திணைக்களத்தால் இறுதிப் பரீட்சையை நடத்துகின்றனர். இது உங்களுக்குச் சுமையாக இருக்கவில்லையா?

**தர்சன்:** கலாசாலை இரு வருட பூரத்தியின் பின் நீண்டகால இடைவெளியில் பரீட்சைகள் நடைபெறுவது பெறுபேற்றை பெறுவதில் தாக்கம் செலத்தினாலும் நமது அன்றாட பணிகளுக்கு இடையிலும் பரீட்சைக்காக ஆயத்தமாக நேரங்களை வகுத்துகொள்வதன் மூலம் அத் தடைகளை இலகுவில் கடந்துவிட முடியும்.

**இளங்கீரன்:** உங்கள் பொழுதுபோக்குப் பற்றிக் கூறுங்கள்.

**தர்சன்:** பொழுதுபோக்காக மடிக்கணினியில் படம் பார்ப்பது. Keyboard இசைப்பது இணையத்தில் புதிய தகவல்களை தேடிப் பெறுவது போன்றவை அமைந்தன. கலாசாலை காலங்களிலும் மாதம் இருமுறை பிரசித்திபெற்ற கோவில்களைத் தரிசிப்பது, சுற்றுலாத் தலங்களுக்கு செல்வது போன்றனவற்றையும் வழமையாக கொண்டிருந்தேன். கச்சத்தீவு சென்றது வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது

**இளங்கீரன்:** உங்கள் எதிர்கால இலட்சியம் பற்றிக் கூறுங்கள்.

**தர்சன்:** ஆசிரியர் பயிற்சினையும், பட்டப்படிப்பினையும் வெற்றிகரமாக முடித்து ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்ட நான் அடுத்த கட்டமாக ICT பாடத்துறையில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிக்காக விண்ணப்பித்துள்ளேன். அடுத்து இலங்கை கல்வி நிர்வாக சேவை பரீட்சைக்கு (SLEAS) தயராகிவருகிறேன். (SLEAS) துறையில் முன்னேறி செல்வதற்கு தற்போது பிரயர்த்தனம் காட்டிவருகிறேன். இதற்கு கலாசாலை விரிவுரையாளர்களின் வழிகாட்டலும் கிடைக்கப்பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

**இளங்கீரன்:** உங்கள் கனவுகள் மெய்ப்பட கலாதீபத்தின் சார்பில் வாழ்த்துகள். நன்றி.



# Effectiveness of Communicative Language Teaching to promote language skill in the school background





Language study is considered to promote our learners to communicate with everyone successfully. There are many various approaches designed to give language knowledge in the school background. Our English teachers get the chance to apply their former experiences with their teaching strategy.Among them, Communicative language teaching is the best method to develop all the skills naturally. Today, the active teachers use this method to develop learners' language skills. So it is focused on using of communicative as the main tool in teaching language and alsoit is the most influential teaching approach in the present world today. However this precious method was originated in 1960.

Communicative Language Teaching (CLT) is an approach to the teaching of second and foreign languages that emphasizes interaction as both the means and the ultimate goal of learning a language.

Varatharasa Sasikumar,
Lecturer
KTC



Especially Dell Hymes (1972) first coined the term 'communicative competence' which referred 'aspects of our competence that enables to convey and interpret massages from one person to another that is prescribed by the scholars considering the classroom approach. Anyway CLT approach was adopted in many countries where English is learnt and spoken as a foreignlanguage. It should be understood through the basic introduction to get the knowledge. But many of our teachers daily choose their conventional teaching method that



means “chalk and talk”.

Ministry of Education has authorized National Curriculum and Textbook through National Institute of Education for preparing English teaching and learning curriculum, syllabus, materials based on CLT approach especially in the background of language. According to Richards & Rodgers, the Communicative approach aims at developing procedures for the teaching of the fourskills that acknowledge the interdependence of language and communication which is more suitable for our learners in the classroom activity because the aims tomake students communi catively. During the language activity in the team or group work, students can gain everything for their better performance.

The objectives of English curriculum should be considered in all the schools through the practical orientation approach which can be consi dered from the primary level. Such as;

*.Understanding simple commands/ instructions/request in English and carry them out.

*. Speaking and understanding simple English according to their age level.

*.Reading and comprehend text books according to their level.

*. Writing alphabets, words, numbers, simple sentences, passages, paragraphs,

informal letter according to their level.

Brown (2001) and Richards (2006) describe the characteristics of Communicative Language Teaching which aresuitable for every language teacher in Sri Lanka. These are as follows;

*.Classroom goals are focused on communicative competence.

*.The target language is a vehicle for communication not only the object of study.

*.Language techniques are designed to engage learners to use the language for Meaningful purposes.

*.Fluency may have to take on more importance than accuracy in order to keep the learners engaged in language use.

*.Accuracy can be judged not in abstract but in context.

*. Students have to use language productively and receptively as these are needed in authentic communication.

*. Students should be given opportunities to be coached on strategies for how toimprove their comprehension, their learning style and process.

*. The teacher acts as a facilitator in setting up communicative activities

In the classroom activities, the learners have to activate and integrate their pre-communicative

knowledge and skills in order to use them for the communication of meaning which is handled by every language teacher in the group or peer opportunity. There is different type of methodology used to activate our learners considering teacher’s approach. In fact, we have to consider the ideal arrangement of a classroom which can promote interaction, involvement with arranging the desks in a semicircle with the help of learners. This specific arrangement is most feasible in getting students involved in acquire communication competence to participate in different activities.

In my opinion, every language teacherhas toplay dimensional role in the classroom.they should know when it isproper time to play the role. There are significant roles taken based on the teachers such as;

*. Facilitator- facilitate the communication process in the classroom.

*.Independent participant- she has to participate within the learning.

*. Resource- she organizes the resources of the activities.

*. Researcher- she is a learner or researcher with much to contribute in terms of appropriate knowledge

Generally communicative language teaching makes use of authentic material, because it is important to give them the opportunity to understand how language is actually used in inside and outside the classroom. Students can be involved in real life situations tasks that require communication. Thus, they will be kept motivated until they finish the activity and see the clear outcome which can be monitored by the senior teachers clearly.

In short, learners should be motivated to learn their second language using with communicative language approach which has developed and gained popularity in the last few decades. Teachers function as facilitators by talking less and listening more and letting the classroom to be learner-centered. The new approaches and exercises have enabled students to gain competency in languages by enhancing fluency and creativity to provide opportunities for more competence.

# பிரயோகத்தமிழ் எது பிழை எது சரி

## (தமிழ்மொழிப் பிரயோகம் பற்றிய ஒரு விழிப்புணர்வுத் தொடர்)



வேல்நந்தகுமார் (MA in Tamil MEd SLTES)
விரிவுரையாளர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

02

கலாதீபம் என்ற எமது கலாசாலையின் இம் மின்னிதழில் தொடராக எழுதிக் கொண்டிருக்கும் எமது தாய்மொழிப் பிரயோகம் சார்ந்த இத்தொடருக்கு நீங்கள் வழங்கிய ஆதரவுக்கு நன்றி சொல்லி மீளவும் இரண்டாவது பகுதியில் உங்களைச் சந்திக்கின்றேன்.

சென்ற பகுதியில் பிரயோகத் தமிழில் நாம் விடுகின்ற எழுத்துப் பிழைகள் சிலவற்றைச் சிந்தித்தோம். அவை தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத உங்களை வழிப்படுத்தியிருக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்தப் பகுதியில் தமிழின் பிறமொழிக் கலப்புக் காரணமாக எது தூய தமிழ்ச் சொல் எது பிறமொழிச் சொல் எனத் தெரியாமலே நாம் பல பிறமொழிச் சொற்களை தமிழ்ச் சொற்கள் என மயங்கித் தவறாகப் பயன்படுத்தும் நிலை பற்றி அதிலும் குறிப்பாக வடமொழிக் கலப்புப் பற்றி சிந்திக்கலாம் என எண்ணுகிறேன்.

தமிழில் பிறமொழிக் கலப்பு என்பதற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு தமிழ்ப் பிரதேசங்கள் மீதான அந்நியப் படையெடுப்புக்களே இதற்குரிய பிரதான காரணியாக விளங்குகின்றது எனலாம். இவ் வகையில் சங்க காலத்தில் கலப்பற்ற தூயதமிழ் இருந்தாலும் சங்கமருவிய காலத்தில் இருந்து இந்நிலை மாற்றமடைகிறது. களப்பிரர் எனப்படும் வடநாட்டைச் சேர்ந்தவர்களால் தமிழ்நாடு ஆளப்பட்டதால் தமிழிற்குள் வடமொழிக் கலப்பு என்பது ஏற்பட்ட ஆரம்ப காலமாக இதனைக் கொள்ளமுடியும். அந்த வகையில் தமிழில் காலந்தோறும் பல பிறமொழிகள் கலந்தாலும் தமிழில் முதல்முதல் கலந்த பிறமொழி என்ற வகையில் வடமொழியே விளங்கிறது. இதன் உச்சத்தை சோழர்கால இலக்கியங்கள் வழி தரிசிக்கலாம். ஆலய வழிபாடு சார்ந்த சமஸ்கிருத மயமாக்கம், சாஸ்திரிய சங்கீத, நடனக் கலைகளின் செல்வாக்கு என்பன இதனை மேலும் வலிமைப்படுத்திய காரணிகளாகக் கொள்ளப்படுகின்றன. இன்று தமிழ்க் கடவுளர்க்கு தமிழில் தான் பூசை செய்யவேண்டும். என்ற சிந்தனையும் இடையில் மறைமலை அடிகள் தோற்றுவித்த தனித்தமிழ் இயக்கச் சிந்தனைகளும், அண்மையில் தஞ்சைப் பெருவு டையார் ஆலய, குடமுழுக்கு விழாவில் ஏற்பட்ட குழப்பங்களும் இத்தகைய வடமொழிசார் சமஸ்கிருத மயமாக்கத்துக்கு எதிரான சிந்தனைகளாகவே அமைகின்றன.

வடமொழி என்பதையோ அதன் இலக்கிய காவியச் செழுமையையோ அதன் புனிதத்தையோ நாம் எதிர்க்கவில்லை. மாறாக, தமிழ் மொழியின் செழுமையை அழிக்க நினைக்கும் ஆக்கிரமிப்பையே நாம் எதிர்க்கிறோம். வடமொழியில் இருந்து தமிழிற்கு மொழிபெயர்த்துத் தழுவி எழுதப்பட்ட பல இலக்கண, இலக்கியச் சிந்தனைகள், படைப்புக்கள் தமிழ்ச் சிந்தனை மரபை, படைப்பாக்க மரபை செழுமைப்படுத்த உதவின என்பதும் மறுப்பதற்கில்லை. நன்னூலார் தற்சமம், தற்பவம் என இலக்கண ரீதியாக வகுத்த சிந்தனையும் இதன்பாற்பட்டதே என்பதைச் சொல்லி இனி, நாம் எமது அன்றாட மொழி வழக்கில் கையாளும் வடமொழிச் சொற்கள் சிலவற்றையும் அதற்கு நிகரான தமிழ்ச் சொற்கள் சிலவற்றையும் நோக்குவது பொருத்தமுடைய தாகும்.

| வடசொல் | தமிழ்ச்சொல் | வடசொல் | தமிழ்ச்சொல் | வடசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|---|---|
| கும்பாபிஷேகம் | குடமுழுக்கு | கர்ப்பக்கிரகம் | கருவறை | பிரசவம் | பிள்ளைப்பேறு |
| நமஸ்காரம் | வணக்கம் | விவசாயம் | வேளாண்மை | அக்னி | தீ |
| குரு | ஆசான் | சங்கீதம் | இசை | யாத்திரை | பயணம் |
| சிஷ்யன் | மாணவன் | சித்திரம் | ஓவியம் | புத்தி | அறிவு |
| வித்தியாலயம் | பள்ளிக்கூடம் | நடனம் | ஆடல் | நித்திரை | உறக்கம் |
| அப்பியாசம் | படிப்பித்தல் | விஞ்ஞானம் | அறிவியல் | புஸ்பம் | பூ |

# பாடசாலைகளில் அசாதாரண நடத்தையுடைய மாணவர்களைக் கையாள்வதில் ஆசிரியரின் வகிபாகம்

(அசாதாரண நடத்தைகள் என்ற விடயம் பற்றிய கற்கை ஆசிரிய கலா சாலைகளுக்கான கல்வி உளவியல் பாடத்திட்டத்தில் வழிகாட்டலும் ஆலோ சனை வழங்கலும் என்ற அலகில் நிறை வுப் பகுதியாக உள்ளது. மாணவர்களி டையே காணப்படக் கூடிய அசாதாரண நடத்தைகள் குறித்து கடந்த 16.11.2020 அன்று கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னெடுத்த இணையவழிக் கருத்தரங் கில் (webinar) குடும்பநல வைத்திய நிபுணர் டாக்டர் எஸ்.குமரன் கருத்துரை வழங்கியிருந்தார். அந்த உரையின் அடிப் படையிலும் தான் தேடியறிந்த விடயங் களின்அடிப்படையிலும் அசாதாரண நடத் தையுடைய மாணவர்களைக் கையாள்வதில் ஆசிரியரின் வகிபாகம் பற்றி எடுத்துரைக்கிறார் இக்கட்டுரையாளர்.)



குடும்பநல வைத்திய நிபுணர் எஸ்.குமரன்

பாடசாலைகளில் அசாதாரண நடத்தை (abnormal behaviour) உடைய மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குரிய பரிகார நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டியது ஆசிரியர் களின் கடமையாகும். ஏனெனில் மாணவர்கள் கணிசமான நேரத்தை பாடசாலைகளில் ஆசிரியர் களுடன் செலவிடுகின்றனர். இதனால் அவர்க ளது நடத்தையில் ஏற்படுகின்ற மாற்றங்களை ஆசிரியர்களால் இலகுவாக இனங்கண்டுகொள்ள முடியும்.



திருமதி த.பத்மபிரியா
ஆசிரிய மாணவி
ஆரம்பப்பிரிவு - 4
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

மாணவர்களிடம் காணப்படுகின்ற பல்வேறு நடத்தை மாற்றங்களை இனங்கண்டு அவர்களை மனநல மருத்துவரிடம் (Psychiatrist) அல்லது குழந் தைகள் மனநல மருத்துவரிடம் (Child Psychiatrist) காண்பித்து அவர்களுக்குரிய சிகிச்சைகளை அளிப்பதன் மூலம் அவர்களின் எதிர்காலம் சிறப் பாக அமைய ஆசிரியர்கள் உதவமுடியும்.

எந்தக் காரணம் கொண்டும் மாணவர்களை, ஆசிரியரோ வைத்தியரோ நடத்தைப்பிறழ்வு அல்லது நடத்தை மாற்றம் உடை யவர் என்று முத்திரை குத் தவோ (Labelling) நோயை நிர் ணயம் செய்யவோ முடியாது (Diagnosis). உளநல மருத்துவர் அல்லது குழந்தைகள் உளநல மருத்துவரால் மட்டுமே இதனைச் செய்யமுடியும். ஆசிரியர்கள் செய்யவேண்டியது நடத்தைப் பிறழ்வாக இருக்குமோ எனசந் தேகித்து மாணவர்களை இனங் கண்டு குழந்தைகள் உளநல மருத்துவரிடம் அனுப்பி அவரது ஆலோசனைப் படி மாணவர்களுக்கு உதவுவதே ஆகும். இருந்த போதும் சிறிய நடத்தை வேறுபாடுடைய மாண வர்களுக்கு அவர்களை அன்பாக அணுகி ஆதர வாகப் பேசிப்பழகி அவர்களது பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களில் மாற்றங்களை ஏற்ப டுத்த முடியும். அந்த வகையில் நடத்தைப் பிறழ்வு அல்லது அசாதாரண நடத்தை ஏற்படுவதற்குரிய காரணிகளையும் அவ்வாறான மாணவர்களை எவ்வாறு இனங்காண்பது பற்றியும் அறிந்திருக்க வேண்டும். இவற்றில் முக்கியமாக பரம்பரைக் காரணிகள் (Genetic), வெளிக்காரணிகள் (Epige netic) மற்றும் சமூகக்காரணிகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

தாயின் கருப்பையில் குழந்தை உருவாகி வளரும்போதே இவ்வாறான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கி விடுகின்றன. பின்னர் குழந்தை பிறந்து வளரும்போது பல்வேறு சமூககலா சாரகுடும்ப காரணிகளால் இந்தநடத்தை மாற்றங்கள் ஏற்படு கின்றன. இவ்வாறான நடத்தைகள் பாடசாலை களில் மட்டுமன்றி வீட்டிலும் மற்றும் வெளி இடங் களிலும் அனைவரிடத்திலும் வெளிப்படுத்தப்பட வேண்டும். அத்தோடு அந்நடத்தைகள் நீண்ட நாட்களாக அல்லது மாதங்களாக இருந்தால் நடத் தைப் பிறழ்வு எனநோய் நிர்ணயம் செய்யலாம். முக்கியமாக மூன்று வகையான நடத்தை மாற் றங்களை மாணவர்களில் அவதானிக்கலாம்.

1. ஆக்ரோசமாக இருத்தல் (Violent)

   உதாரணம்:- மற்றவர்களை / பிராணிகளை கொடுமைப்படுத்தல்

2. வாக்குவாதத்தில் ஈடுபடுதல்

   உதாரணம்:- பாடசாலையில் வாக்குவாதத்தில் ஈடுபடுதல்

3. தன்னைத்தானே துன்புறுத்தல்

   உதாரணம்:- தன் கையைத் தானே வெட்டுதல்

இதைவிட மற்றுமொரு வகையான நடத்தை மாற்றம் Social Development Disorder ஆகும்.

உதாரணம்:- 1. Autism

2. ADHD (Attention Deficit Hyperactivity Disorder)

இது ஒரு நடத்தைப் பிறழ்வு அல்ல சமூக தொடர்பாடல் பிரச்சினை ஆகும். அதாவது இவர்களுக்கு மூளைவிருத்தி நடைபெறவில்லை. இவர்களைப் பாட சாலைகளில் வைத்துப் படிப்படியாக மாற்ற ஆசிரியர்கள் முயற்சிக்கவேண்டும்.

மாணவர்டகளிடையே ஏற்படக் கூடிய வேறு சில அசாதாரண நடத்தைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. depression
2. schizophrenia
3. anxiety
4. panic disorder
5. phobia

இவை பொதுவாக சிறியவர்களில் ஏற்படுவதில்லை, Teen age பருவத்தில் உள்ளவர்களிலும் பெரியவர்களிலும் ஏற்படவாய்ப்புள்ளது.

பெற்றோர்களால் பிள்ளைகள் துன்புறுத்தப்பட்டால் அவர்களை அணுகுவதற்குரிய சட்ட ரீதியான உரிமை பிரதேசசெயலக உத்தியோகத்தர்களுக்கு உண்டு. தொலைபேசி, முகவரி தெரியுமிடத்து அவர்கள் வீட்டிற்கு சென்று உரையாடி நடவடிக்கை எடுப்பார். இதனை ஆசிரியரோ வைத்தியரோ மேற்கொள்ளமுடியாது. ஏனெனில் ஆசிரியர்களுக்கோ வைத்தியருக்கோ சட்டரீதியான அங்கீகாரம் கிடையாது.

இவ்வாறான பிரச்சினைகளை வருமுன் காப்பதே மிகவும் சிறந்தது. அல்லாதுபோனால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுவதோடு பாரிய சமூகப்பிரச்சினையாகவும் உருவெடுக்கும். எனவே ஆசிரியர்கள் தனியே கற்பித்தலோடு நின்றுவிடாது நடத்தைமாற்றம் அல்லது நடத்தைப் பிறழ்வு ஏற்படாதிருக்க பிள்ளைகளுடன் அன்பாகவும் நட்புறவாகவும் இருக்கவேண்டும். பிள்ளைகளைப் பெயர்சொல்லி அழைத்தல் அவர்களின் குடும்பப் பின்னணிகளை அறிந்திருத்தல், பார்வைத் திறன், கேட்கும் திறன், பேசும்திறன் போன்ற திறன்கள் சீராக உள்ளனவா என உறுதிப் படுத்தல், எழுத்து, இலக்கங்களை பிள்ளை புரிந்துகொள்கின்றதா என அறிதல், வீட்டில் துஷ்பிரயோகம் நடைபெறவில்லை என உறுதிப்படுத்தல், அத்தோடு ஆசிரியர் பிள்ளை உளவியலையும் தெரிந்திருக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு ஆசிரியரும் செயற்பட்டால் பாதிக்கப்பட்ட மாணவர்களை இனங்கண்டு உளநல மருத்துவருடன் இணைந்து அவர்களை சமூகத்தில் நற்பிரஜையாக உருவாக்க முடியும்.




# நாவலர் வகுத்த புதிய பாதை



**நி.பாபுதரன்**
**ஆசிரிய மாணவன்**
**இந்துசமயத்துறை**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**

தம்மைச் சமய குரவர்கட்கு ஒப்பிடுதல் சிறிதும் பொருந்தாதென்றும், அவர்களது அடிப்பொடிக்குள்ள மகத்துவத்தில் ஆயிரத்திலொன்று தானும் தமக்கு இல்லையென்றும் நாவலர் பணிவடக்த்துடன் கூறியுள்ளபோதும். நாவலரைப் பற்றி எழுதிய பலர் அவரை ஐந்தாம் குரவர் என்றே வருணிக்கின்றனர். முன்வந்த சமயகுர வர்கள் புறச்சமயங்களைச் சாடித் தம்சமயத்தை நிலை நாட்டினர். அவரோடு ஐவராமென்ன, பர சமய கோளரியாக விளங்கியவர் நாவலர் என்பது யாவருமறிந்ததொன்றே.



தனது காலத்துக்கேற்றவை எவை என்பதனையும், இன்றியமையாதன எவை என்பதையும் சிந்தித்துக் தெளிந்து அவற்றைச் செயற்படுத்தியமையே நாவலரது சிறப்புக்கும் தனித்துவத் துக்கும் அடிப்படையாகும். அதாவது நாவலரின் தற்கால உணர்வே அவரை அவரது சமகாலத்த வர் பலரினின்று வேறுபடுத்தித் தனிச் சிறப்புடை யராய்க் காட்டுகின்றது. நாவலர் வரலாற்றுப் பெருமகன். பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழ்ச் சமுதாயத்திற்கு அவசியமாயிருந்த சிற்சில கருமங்களை நிறைவேற்றியவர். நன்கு ஆற்றப்பட்ட அக் கருமங்கள் பிறருக்கு ஆதர்சமாக அமைந்தன. அவையே புதுப்பாதை காட்டும் புதுப்பணிகளாயும் அமைந்தன. பிறர் நலம் என்ற மகோன்னதமான இலட்சியத்துக்குத் தம்மை அர்ப்பணித்ததே நாவலர் காட்டிய புதுப்பாதைக்கு வித்தாகும். இவ் வித்திலிருந்து விரிந்தனவாக ஐந்து முதன் முயற்சிகளைக் குறிப்பிடலாம்.

1. தமிழிலே முதன் முதலாகப் பிரசங்கம் செய்தார்.
2. தமிழிலே கட்டுரை என்பது முதலில் இவரால் நல்லமுறையில் எழுதப்பட்டது.
3. தமிழில் எழுந்த பாடநூல்களுக்கு இவரே வழிகாட்டி
4. வசனநடையிற் குறியீட்டு முறையை முதன் முதலிற் புகுத்தினார்.
5. சைவ - ஆங்கில பாடசாலையை முதன் முதல் ஆரம்பித்தவர்.

மேற்கூறிய ஐந்து முயற்சிகளும் நாவலருக்கு முன்னர் எவராலும் மேற்கொள்ளப்படவில்லை எனக் கூறவேண்டியதில்லை. ஆயினும் தமிழ் - சைவம் என்ற கோட்பாட்டிற்குள் இவற்றைப் பழுதறச் செய்து முடித்தவர் நாவலரே. ஏறத்தாழ 1820 ஆம் ஆண்டளவிலிருந்தே, சென்னைக் கல்விச் சங்கம் சில தமிழ் நூல்களையும் வெளியிட்டு வந்தது. சென்னையில் அக்காலத்திற்புக ழுடன் விளங்கிய வித்துவான். சிதம்பர பண்டாரம், தாண்டவராய முதலியார், சிவக் கொழுந்த தேசிகர் முதலிய இயற்றமிழ்ப் போதனாசிரியர்கள் இச் சங்கத்து முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர். வெள்ளைக் காரத்துரை

மாரின் கருத்துக்கிணங்கச் சில பழைய தமிழ் நூல்களைப் புதுப்பித்தும், சில ஆங்கில நூல் களை மொழிபெயர்த்தும் வெளிவிட்டனர். ஆனால் நாவலரே தமிழ் மாணவருக்கு ஏற்ற பெயர்த்தும் வெளிவிட்டனர். ஆனால் நாவலரே தமிழ் மாண வருக்கு ஏற்ற புதிய பாலபாடங்களை எழுதினார்.

இது பற்றி அக்காலத்திற் சென்னையில் வெளிவந்த Native public Opinion என்னும் ஆங்கி லப் பத்திரிகை மதிப்புரையாகக் கூறியுள்ளது மனங் கொளத்தக்கது.

"இந்த அறிஞர் எழுதிய பாலபாடங்களைத் தவறாது இங்குள்ள வித்தியாசாலைகளில் உப யோகித்தல் வேண்டுமென்று நாம் திடமாகச் சொல்லுவோம், இச் சென்னையிலுள்ள வித்தியா சங்கத்தார் வெளியிடும் வசன பாடப்புத்தகங் களைக் காட்டிலும் நாவலர் பாலபாடங்கள் எல்லா வற்றாலும் சிறந்தவையாகும். வித்தியா வெளி யிட்ட புத்தகங்ளை நாவலர்கள் எழுதிய பால பாடங்களோடு ஒப்பிட நினைத்தமைதானும் தவ றெனலாம்"

மாணவரின் மன வளர்ச்சியையும் கல்வி வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு "சுதேசிய" தேவைகளை நிறைவேற்ற நாவலர் பாலபாடங் களை எழுதியதன் தருக்க ரீதியான முடிவே அவர் எழுதி வெளியிட்ட இலங்கைப் பூமி சாஸ்திரம், அவர் எழுதத் தொடங்கியிருந்த தமிழ், ஆங்கில -தமிழ், வடமொழி-தமிழ் அகராதிகளும் இத்தகைய கல்வித் தேவையினால் உந்தப் பெற்றனவே.

உரைநடையை எழுதியதிலும் நூல்களைப் பதிப்பித்ததிலும் நாவலருக்கு முன்னோடிகள் பலர் இருந்திருக்கின்றனர். ஆனால் அவர்களுக் கும் நாவலருக்கும் நோக்கு நிலையில் வேறு பாடுண்டு. ஐம்பெரும் புது முயற்சிகள் எமது சமுதாயத்துக்கு மிகவும் வேண்டற்பாலன வாயி ருந்து நற்சாதனைகளாயமைந்தன. ஆதீனங்க ளோடு சமயமும், சமஸ்தானங்களோடு புலமையும் முடங்கிக் கிடந்த சூழ்நிலையில் இவையிரண் டையும் பரந்துபட்ட மக்களுக்கு உடைமையாக்க முனைந்தமையே நாவலரது தலையாய புது முயற்சியாகும்.

நாவலர் புதிதாகச் செய்த முயற்சிகள் அவ ரது பெருநோக்கத்துக்கு ஏதுக்களாகவே கருதப் பட்டன என்பது நினைவில் நிறுத்தவேண்டியது. இவற்றின் மூலம் "சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவாகியாகிய கல்வியையும் வளர் த்தல் வேண்டும் என்னும் பேராசையே" தன்னை இருபது வருடகாலம் இரவும் பகலும் தொண் டாற்றச் செய்தது என்று "சைவசமயிகளுக்கு விக்கியாபனம்" *(1868)* என்னும் கட்டுரை யில்



எழுதியுள்ளார். பேராசை மட்டும் இருந்தாற் போதுமா? வழிவகைகளும் காணல் வேண்டு மன்றோ! இவற்றைத் தனது எதிர்க் கட்சியினரிட மிருந்தே பெருமளவிற்குப் பெற்றுத் தமதாக்கிக் கொண்டார். "நாமும் ஏன் அந்தப் பாதிரிமார்கள் போலக் கிளம்பி நமது சைவ சமயத்தைப் பரப் பலாகாது? என்ற கேள்வி நாவலருக்கு உதித்தது.

மேலை நாட்டுக் கல்வி - கலாசார ஆதிக்கத் தின் பண்பையும், பயனையும் நாவலர் கண்டு தனித்து நின்று சமர்புரிந்தார். காலமும் இடமும் நோக்கி எதிரியின் பாணங்களுக்குப் பதிற்பாணங் கள் சமைத்தமையே அவரது வரலாற்றுப் பணி யின் இரகசியமாகும். இதனை எத்துணை அழுத் திக் கூறினும் தகும்.

இவ்வுண்மையினையே தனக்கேயுரிய நடை யிற் பின்வருமாறு கூறியுள்ளார். பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை. "உண்மையை நோக்குமிடத் துப் பதினான்கு வருடக் கிறிஸ்தவ சூழலே நாவ லரை நமக்குத் தந்தது. ஆபிரிக்க தேசமே காந் தியை மகாத்மா ஆக்கியது. பதினான்கு வருடக் கிறிஸ்தவ சூழல் அமையாதிருந்தால் ஆறுமுக நாவலர் என்றொருவர் யாழ்ப்பாணத்தில் இல்லை."

தனது காலத்துச் சின்னஞ் சிறிய மனிதரிலி ருந்து வேறுபட்டுப் "புதுமை"யில் அடிபட்டுப் போகாமலும், பழமையில் அமிழ்ந்து போகாம லும் இரண்டையும் தரம் பிரித்து இனங்கண்டு புதுவழி கண்டமையாலேயே "தத்துவ விசாரணி" பத்திராதிபர் "சென்னை முதல் ஈழமீறாகவுள்ள இத்தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக்கிணை இல்லாதவர்" என்று நாவலரை வருணித்தார். சி.வை.தாமோதரம்பிள்ளை தமது சேனாவரைய விளம்பரத்திலே *1868* நாவலரவர்கள் "தமிழ் நாட்டு வித்துவான்களில் தமக்கிணையில்லாதவர்" என்று விசேடித்தமை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்றே தோன்றுகின்றது.



# வாடகை வீடு

## சிறுகதை

இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இப் படி வாடகை வீடுகளில் குடியிருக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் இரண்டு வருடத்திற்கு மேல இருக்க விடுகுதுகளுமில்ல. மாரி காலத்தில தான் எழும் பச் சொல்லி சொல்லுதுகள். இந்தப் பொம்புளப் புள்ளயலையும் வைச்சுக்கொண்டு இப்பிடி ஆறேழு வீடுகளுக்கு மாறிமாறி வந்திட்டம். இந்த அறு வாங்கள் எப்பத்தான் எங்கட ஊருக்கு விடப்போ றாங்களோ என்று புறுபுறுத்தவாறே கணவனிடம் தேத்தண்ணிக்கோப்பையை நீட்டினாள் ராசகு மாரி.

தேத்தண்ணியை வாங்கிப்பருகியவாறே எங் களோட தலைவிதி இப்படிக்கிடந்து கஸ்டப்பட வேண்டிக் கிடக்கு. எல்லாம் இருந்தும் இப்படி சொந்த நாட்டிலேயே அகதிகளாக அங்குமிங்கும் அலைஞ்சுதிரிய வேண்டியிருக்கு. பொம்பிளப் பிள்ளையள்வேற கலியாண வயசுக்கு வந்திட்டு துகள். சொந்தக் காணிநிலம் வீடுவாசல் இல்லா மல் அதுகளை கட்டிக்குடுத்து ஒருவனட்டகரை சேர்க்க முடியேலை. பார்க்கிறவரனெல்லாம் சீதன மாக லட்சக்கணக்கில காசும் நகையும் அதோட வீடுவளவுமெல்லகேட்கினம். காசு பணம் நகை களை ஒருவாறு அவனிட்ட இவனிட்ட கடனக் கிடனவாங்கியாவது குடுத்திடலாம். வீடுவளவுக்கு எங்கபோறது என்று அலுத்தவாறே தேத் தண் ணியைக் குடித்து டம்ளரை மனைவியிடம் கொடுத்து விட்டு ஈசிச்சேரில் சாய்ந்து



கொண்டான் அழகேசன். அவனது மனம் சொந்த ஊரான முகமாலையை நோக்கிநகரத் தொடங்கி யது.

அழகேசன் பிறந்து வளர்ந்ததெல்லாம் பனை மரக்காடு என வர்ணிக்கப்படும் முகமாலையில் தான். அழகேசனின் குடும்பம் மிகவும் பெரியது.

கரவை செ.றமேஷ்
ஆசிரிய மாணவன்
ஆரம்பக்கல்வி - 2
கோப்பாய் ஆசிரிய
கலாசாலை



குடும்பத்தில் ஆறாவது பிள்ளையாக பிறந்தவன் தான் அழகேசன். அவனுக்கு கீழேயுள்ள சகோத ரிகளும் சகோதரர்களும் நல்ல நிலையை அடை வதற்காக மிகவும் பிரயாசப்பட்டான். அவனது குடும்பம் ஓரளவு ஏழ்மையானது. இருந்தாலும் தன் குடும்ப சுமையைதானும் ஏற்றுக்கொண்டு உழைக்க ஆரம்பித்தவன் தான் அழகேசன். தனது சாதாரண தரம் வரையான கல்வியை முடித்துக் கொண்டு குடும்ப சூழ்நிலையால் மேலே படிக்க முடியாமல் உழைக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற் குள் தள்ளப்பட்டான்.

ஒரு கூட்டுறவுக் கடையில் கிளை முகாமை யாளராக சேர்ந்துதன் சிறுவயது வாழ்க்கையை அர்ப்பணித்தவன் தன் சகோதரிகள் அனை வரையும் கரைசேர்த்த பின்பே தன் மாமன் மக ளான ராசகுமாரியை திருமணம் செய்துகொண்டான். அதன் பல னாக நான்கு பெண்பிள்ளைகளும் மூன்று ஆண்பிள்ளைகளும் அவ னது திருமண வாழ்க்கைக்கு அழகு சேர்த்தன. குறைவுகளின் மத்தியிலும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது அழகேசனின் குடும்பம்.

இந்தவேளையில் தான் உள் நாட்டு யுத்தம் ஏற்பட்டது. அழகேச னும் தன் குடும்பத்துடன் முக



மாலையைவிட்டு இடம்பெயர்ந்து பருத்தித்துறை யில் வந்து குடியிருந்தான். வாடகை வீட்டில் குடியிருந்தாலும் தன் பிள்ளைகளை எந்தக் குறை யும் தெரியாமல் நல்லமுறையில் படிப்பிச்சு வளர் த்து வந்தான். தன் குடும்பத்தில் ஏழ்மைக்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதற்காக தன்னை வருத்தி உழைத்தான். உடல்சோர்வின் மத்தியிலும் தன் பிள்ளைகளின் எதிர்காலத்தை எண்ணிமிகவும் கஸ்ரப்பட்டான். அவனது கஸ்ரத்தில் பங்கெடுத்து அவன் மனைவியும் பிள்ளைகளை பண்புதவறாது வளர்த்து வந்தாள்.

உயர் படிப்பை முடித்துக்கொண்ட அவனது பிள்ளைகள் இருவருக்கு அரசவேலை கிடைத் தது அவனது சுமையை கொஞ்சமாக குறைத் தது. பிள்ளைகள் வளர்ந்து உழைக்க ஆரம்பித் தது அவனுக்கு மகிழ்ச்சியை தந்தாலும் சொந்த ஊருக்குபோக முடியவில்லையே என்ற ஏக்கம் எப்பொழுதுமே மிகுதியாகக் காணப்பட்டது. காலங் களும் வேகமாக நகரத்தொடங்கியது. உள்நாட்டு யுத்தம் முடிந்து சமாதானமான சூழ்நிலை காண ப்பட்டது. மக்கள் மறுபடியும் தங்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டனர்.

ஆனால் முகமாலைப் பிரதேசத்திற்குள் யாரையும் ராணுவம் விடவில்லை. கண்ணிவெடி புதைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்து அங்கு எவ ரும் செல்வதற்கு அனுமதிக்கவில்லை. பாது காப்பு வலயமாக பிரகடனப்படுத்தியிருந்தது. அழ கேசன் ஒருவாறு தூரத்திலிருந்து தன் வீட்டைப் பார்த்தான்.

ஓ..வென்று அழாத குறையாக தலையில் கைவைத்து உட்கார்ந்தான். அவன் ஆசை ஆசை யாக கட்டி வாழ்ந்த அவனது வீடு யுத்தத்தால் செல்விழுந்து தரைமட்டமாகக் கிடந்தது. அழகே சன் தன் உழைப்பு முழுவதையும் அந்த வீட்டைக் கட்டுவதற்காக செலவழித்திருந்தான். தன் உழை ப்பு முழுவதும் இப்படி அநியாயமாகப் போய் விட்டதே என கண்ணீர்விட்டான்.

இனி இப்படி ஒரு வீட்டைக் கட்டுவதென் றால் எவ்வளவு பணத்தைதேட வேண்டும். சொந்த வீடுவாசல் இல்லாமல் இந்தப் பிள்ளையளோட எப்படி வாழப்போகிறேன் என்று ஏங்கியபடியே வீடு வந்துதன் மனைவியிடம் சொல்லி வேதனைப்பட்டான். இப்படியே காலம் பூராவும் வாடகை வீட்டிலேயே வாழவேண்டி வருமோ என்று அவன் மனம் அடிக்கடி ஏங்கிக் கொண்டிருந்தது. இந்த வாடகை வீட்டிற்கு ஒரு முடிவு கிடையாதா என அவன் எண்ணாத நாளி ல்லை எனலாம்.

வேறெங்காவது காணி வாங்கி ஒரு வீட் டைக்கட்டுவம் என்றாலும் அதற்கு எத்தனை லட்ச ங்கள் தேவை. அவனதும் பிள்ளைகள் இருவரி னதும் உழைப்பில் குடும்பத் தேவைகளும் மற் றப் பிள்ளைகளுடைய படிப்புக்குமே ஓரளவு போதுமானதாக உள்ளது. இதில் காணி வீடு என்பதுவெறும் எட்டாக்கனியான விசயமே.

என்னசெய்வதென்று தடுமாறினான் அழகே சன். சொந்த ஊரைத்தவிர வேறுவழியில்லை என்பது அவனைப்போன்ற பலரது நிலமை. இதற்குயார்தான் முடிவுகட்டுவது? சம்மந்தப்பட்ட அரசியல்வாதிகளோடும் கதைத்துப் பார்த் தாயிற்று எந்தவித பிரயோசனமும் இல்லை. யாரும் மக்களுடைய நிலையை புரிந்துகொள் ளும் மனநிலையில் இல்லை என்பது அழகே சனுக்கு நன்றாகத் தெரிந்தது. யாரைச்சொல்லி நோவது எல்லாம் நம்ம தலைவிதி என்று நொந்து கொள்வதைத் தவிர வேறென்னசெய்வது.

இனிவாறது மாரிகாலம். இப்ப இருக்கிற வீட்டுக்காரரும் எழும்பச் சொல்லிட்டுதுகள். சீக்கி ரமே வேறவீடு பார்க்கவேணும். என்ன வாழ்க்கை யடா இது என நொந்துகொண்டான் அழகேசன்.

என்னப்பா ரவுண் பக்கம் ஒருக்கால் போய் வீடேதும் வாடகைக்கு கிடைக்குமா என்றுபார்த்து வாங்கோவன். இந்தமாசம் வீட்டைவிட்டு எழும்ப வேணும் என்ற மனைவியின் குரல்கேட்டு சுய நினைவுக்கு வந்தவனாக எழுந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு கனத்த மனதுடன் வாடகை வீடு பார்ப்பதற்காகப் புறப்படலானான் அழகேசன்.

# ஒளிமயமான கிறிஸ்து பிறப்புவிழா
# மன்னார் பிரதேசத் தனித்துவங்கள் ஓர் பார்வை

அ.யுஸ்ரின் அஞ்சலா
தமிழ்ச் சிறப்புநெறி
ஆசிரிய மாணவி
மன்னார்



உலககெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்கள் இறை மகன் இயேசு பூமியில் அவதரித்த நாளான கிறிஸ்மஸ் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடுகின்றரர்கள். உலகம் பாவ இருளில் மூழ்கிக் கிடந்த வேளையில் உலகையையும் மக்களையும் பாவச் சேற்றிலிருந்து மீட்டெடுக்கவே இறைவன் தன் குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பினார். இறைவன் மனுக்குலத்தின் மீது கொண்ட மட்டில்லாத அன்பின் நிமித்தமாகவே இதனைச் செய்தார்.

உலகின் மனிதர்களான ஆதாமும் ஏவாளும் கடவுளது அன்பினை முழுமையாக அனுபவித்தார்கள். சிங்காரத் தோட்டமொன்றை அவர்களுக்குக் கடவுள் வழங்கி உலகிலுள்ள அத்தனையையும் அனுபவிக்குமாறு, அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு வாய்ப்பளித்தார். முதல் மனிதர்களாகிய ஆதாமும் ஏவாளும் கடவுளுக்கு கீழ்ப்படியாமையினால் கடவுளின் அன்பிலிருந்தும் சிங்காரத் தோட்டத்திலிருந்தும் வெளியேற நேர்ந்தது. முதல் பெற்றோர்களான அவர்கள் செய்த பாவம் மனுக்குலத்தில் தொடர்ந்தது. இறைவன் மனிதர் மீது கொண்ட அன்பினால் தேடிவந்து அன்புசெய்தார். பாவத்திலிருந்து மனுக்குலத்தை மீட்டெடுப்பதற்காக தமது ஒரேபேறான பாலனை இவ்வுலகிற்கு அனுப்பினார். அவரே இயேசு.

எமது பிரதேசங்களில் குறிப்பாக எங்கள் மன்னாரில் நத்தார் பண்டிகை டிசம்பர் தொடக்கத்திலேயே களை கட்டிவிடும். குறிப்பாக வீடுகளில் நத்தார் குடில் அமைப்பதில் சிறுவர் தொடக்கம் பெரியவர் வரை குடிலுக்காக தமது நேரத்தை செலவிடுவதை காணமுடியும். கிறிஸ்மஸ் மரம் என அழைக்கப்படும் சவுக்க மரத்திற்கு பெரும் கேள்வி ஏற்படும். கிறிஸ்மஸ் பண்டிகை வரும் அன்றைய நாட்களுக்கு முன்வரும் நான்கு ஞாயிற்றுக் கிழமைகளில் ஆலயத்தில் கிறிஸ்து பிறப்பை வரவேற்கும் முகமாகவும், மனதை ஆயத்தம் செய்யும் விதமாகவும் விளக்குகள் ஆலயத்தில் ஏற்றப்படும்.

இளைஞர்கள் தமது வயது மற்றும் வசிக்கும் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்ற ரீதியில் அணிகளாக இணைந்து எமது பிரதேசத்தின் ஒவ்வொரு சந்திகளிலும் 35 அடிகளுக்கும் மேற்பட்ட பிரமாண்டமான கிறிஸ்மஸ் மரங்களை உருவாக்கி அழகிய வர்ண அலங்காரங்களை ஒளிர விட்டு தம் ஒற்றுமையை உணர்த்துவர். குறிப்பிட்ட அந்த நாட்களில் எமது பிரதேசம் ஒளிமயமாக இருக்கும். மற்றும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு கரோல் போட்டிகள் பாடசாலை மாணவர்களுக்கு நடைபெற்று பரிசில்கள் வழங்கப்படும். ஒளி இரவு என்று அழைக்கப்படும் ஓர்நாளில் சகலரும் கலந்துகொள்ளும் விதமாக விளையாட்டுக்கள் நடைபெற்று மனதை ஒருநிலைப்படுத்தும் சந்தர்ப்பங்களும் உண்டு. அதுமட்டுமன்றி எமது ஆலயம் பிரமாண்டமானது. ஆனாலும் அவ் ஆலயத்தை அழகுபடுத்துவதில் யாரும் பின்நிற்பதில்லை. கிறிஸ்மஸ் நாட்களில் அவ்வளவு அழகாக காட்சியளிக்கும் எமது ஆலயம். ஏதோ மாளிக்கைக்குள் புகுந்த அநுபவத்தை அளிக்கும். பெரும்பாலும் ஆலயங்களில் இரவு 11.30 மணிக்கு கிறிஸ்மஸ் திருப்பலி ஆரம்பமாகும். ஆலயமும் சிறப்பாக இருக்கும். இறைமக்களும் புத்தாடை அணிந்து புது மனிதர்களாக கண்



களுக்குத் தெரிவர் அதிலும் தொலைக்காட்சியில் அன்றைய திருப்பலி நேரடியாக காண்பிக்கப் படும் என்று அறிந்தால் யார் யார் என்று தெரியாத அளவிற்கு முகப்பூச்சுக்கள் அதிகமாக இருக்கும்.

அன்றைய திருப்பலியில் குழந்தை வரம் வேண்டி, குழந்தை இல்லாதவர்கள் அவர்களின் விருப்பத்திற்கு உட்பட்டு, பிறந்த பாலகனை ஆல யத்தின் முடிவிலிருந்து தூக்கிவந்து ஆலயத்தின் முன் பக்கத்தில் அமைத்துள்ள கிறிஸ்மஸ் குடி லில் வைப்பார்கள். அடுத்த கிறிஸ்மஸ் தினத்திற் குள் சிலருக்கு குழந்தை பிறந்தும் உள்ளது. அது மட்டுமன்றி நோய், குழந்தை வரம்வேண்டி, பல் வேறு தேவைகளுக்காக செபம் செய்து பாலக னுக்கென்று குடிலில் பால் வைப்பார்கள். அதனை அருட்தந்தை ஆசீர்வதித்த பின் யார் வேண்டு மானாலும் அதை பருகலாம். குறிப்பாகப் பிறந்த குழந்தைகளின் நலன்வேண்டி அந்த பாலைக் குழந்தைகளுக்கு பருக்குவர். இது பெரும்பாலும் பல பிரதேசங்களில் நடைபெறுகிறது. குறிப்பாக எனது பிரதேசமான மன்னார் பிரதேசத்தில் நடை பெறும்.

ஒளியாம் இறைவன் மண்ணுலகில் அவத ரித்த நாளே இந்த கிறிஸ்மஸ் பெருவிழாவாகும். கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாட அல்லது அதற்குத் தயாராகுவதில் இரண்டு விதங்களை இக்கால கட்டத்தில் காணமுடிகிறது. அதிலொன்று கத்தோலிக்கத் திருச்சபையால் குறிக்கப்பட்ட திரு வருகைக் காலம். மார்கழி மாதம் ஆரம்பமாகும் முன்பே இத்திருவருகைக் காலம் ஆரம்பமாகி விடுகிறது.

இயேசு இந்த மண்ணுலகில் பிறக்கப் போகி றார் என்றால் அதற்கான ஆயத்தங்கள் எவ்வாறி ருக்க வேண்டும் என்பதை திருவருகைக் காலம் வெளிப்படுத்துகிறது. செபதவங்கள், மனமாற்றத் திற்கான செயற்பாடுடன் ஒளிவிழாக்கள், கரோல் கீதமிசைத்தல் போன்றவற்றுடன் மண்ணில் பிறக் கும் இயேசு மனதில் பிறக்கவேண்டும் என்பதற் காக உள்ளார்ந்த ஆயத்தங்கள் இடம்பெறும். பாவ சங்கீர்த்தனம், விசேட மறையுரைகள் இக் காலங்களில் முக்கியம் பெறுகின்றன. அத்துடன் தானதர்மங்களும் வழங்கப்படுவது வழக்கம். இவ் விடயங்களில் பகிர்தல் இடம்பெறுகிறது.

மற்றொரு வகையில் கிறிஸ்மஸ் பண்டி கையை வர்த்தக மயமாக்கும் செயற்பாடுகளும் மும்முரமாக நடைபெறுவது வழக்கம். திருவரு கைக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்பே வர்தக நிறுவனங்களில் நத்தாரைக் குறிக்கும் சோடனை கள், நத்தார் மரங்கள், வர்ண ஒளி அலங்காரங்கள் நிரம்பிக் காணப்படும். வர்த்தக நிலையங்களுக் குள் மக்களை சுண்டி இழுக்கும் வகையில் நத்தார் வர்த்தக செயற்பாடுகள் இடம்பெறும். மதுக்கடைகளிலும், சூதாட்டக் கொட்டகைகளி லும்கூட அலங்காரங்கள் காட்சியளிக்கும். உண் மையில் இதற்கு மக்கள் வசீகரிக்கப்படுவதும் இடம்பெறாமலில்லை.

கிறிஸ்மஸ் பண்டிகையின் பொருள் எங்கோ தொலைந்து வர்தகமயமாக கிறிஸ்மஸ் மாறும் அவலம் இடம்பெறுவது கசப்பான உண்மை. நத்தாரையொட்டி மலிவு விற்பனைகளும் புதிய பொருட்களின் அறிமுகம் இடம்பெறுகிறது. ஒரு புறம் உண்மையான மனமாற்றம் மறுபுறம் வர்த் தக மயமாக்கலாக இந்த கிறிஸ்மஸ் பண்டிகை இடம்பெறுகிறது. நாம் வாழும் இந்த மண்ணில் நம் அயலில் அன்புக்காக ஏங்குவோர் வறுமை யில் வாடுவோர், ஏழ்மையிலிருந்து மீள முடியா தோர் பலர் உள்ளனர். "உன்னைப் போல உன் அயலானையும் நேசி" என்றுரைத்த இயேசு பிறப் பின் இக்காலங்களில் நாம் இத்தகையோரைச் தேடிச் சென்று அன்புகாட்டவும், உதவவும் உள் ளத்தைப் பகிர்வதும் முக்கியமாகிறது.

எனினும் வசதி படைத்தோர் வசதியுடன் இருப்பவர்களுக்கு விருந்தோம்பல் செய்வதும், இல்லாதோரை கணக்கிலெடுக்காமல் இகழ்வதும் இடம்பெறுகிறது. பல்வேறு ஆடம்பர செலவுகளைத் தவிர்த்து ஏழை எளியோருக்கு உதவுவதை இக் காலத்தில் மேற்கொள்ள வேண்டும். யாராவது இதைச் செய்வார்கள் என்று நாம் ஒதுங்கி இருந் தால் எம்மைப் போன்றே மற்றவரும் சிந்திப்பர். நாம் முதலில் இதனைச் செய்ய முன்வரவேண் டும். நம் அன்பையும் உதவியையும் பெற்றுக் கொண்டவர்களின் மகிழ்ச்சியால் நாம் இயேசு வைக் காணவேண்டும்.

அந்த வருடம் முழுக்க பல அசௌகரியங் களை சந்தித்து களைப்படைந்து விட்டோம். இவ் வருட தொடக்கத்தில் எடுத்த தீர்மானங்களை நிறை வேற்ற முடியாமல் தணிந்துவிட்டோம். வருகிற வருடம் எமக்கு சிறந்த வருடமாக அமையவும், நாம் எடுக்கவிருக்கிற தீர்மானங்கள் நிறைவேற வும் பாலகன் கிறிஸ்து உங்கள் வாழ்வில் ஒளி யேற்ற காத்திருக்கிறார். முடிந்தளவிற்கு எல்லோ ரையும் அன்பு செய்வோம். இவ்வுலகில் அன்பை விட சிறந்த சக்தி எதுவுமில்லை. பாரபடசமின்றி எல்லோரையும் அன்பு செய்வோம். அனாவசிய செலவுகளைத் தவிர்து, தேவைகள் வேண்டி யோரை அணுகி எம்மால் இயன்றதை நிறைவேற்று வோம். பாலகன் இயேசு எம்மெல்லோரையும் சகல நன்மைகளாலும் ஆசீர்வதிப்பாராக.

## "அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை"

# செயற்றிட்டத்தில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பல செயற்றிட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

இலங்கையின் கல்வித்துறை வரலாற்றில் பாரியதொரு நிகழ்ச்சித்திட்டமான அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் (NSBS) ஊடாக அநேகமான பாடசாலைகளும் அதனுடன் இணைந்த கல்வி நிறுவனங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இத்தேசிய வேலைத்திட்டமானது திட்ட முகாமைத்துவப் பிரிவின் திட்டப்பணிப்பாளர் திரு கந்தையா பத்மானந்தன் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் ஒவ்வொரு மாகாண திட்டமுகாமைத்துவப் பிரிவின் கீழ் நேரடியாகவும் ஏனைய மாகாண நிறுவனங்களூடாகவும் முன்னெடுக்கப்படுகிறது. தேசிய ரீதியாக 6000 மில்லியன் ரூபாய் அளவில் வேலைத்திட்டங்கள் நடைபெறுகின்றன.



எந்திரி. ஜெகநாதன் வாசுதேவன்
பொறியியலாளர்
NSBS Project – Northern Province

இந்த வேலைத்திட்டத்தின் கீழ், ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்களையும் உள்ளீர்த்து தரமுயர்த்த வேண்டும் என்ற திட்டப் பணிப்பாளரின் கருத்திற்கு அமைவாக, கோப்பாயில் அமைந்துள்ள கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கான தேவைப்பாடுகள் பற்றி, கலாசாலையின் அதிபர், பிரதி அதிபர் உட்பட்ட குழாமுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. 75 வருடங்களாக எந்தவித பாரிய திருத்தவேலைகளும் செய்யப்படாதிருந்து பழைய சுண்ணாம்புக் கட்டடங்களை கொண்ட கட்டுமாணங்களை புனரமைத்தல் சவாலானதாகவே இருந்தது.

நீண்ட பாரம்பரியத்தை உடையதும், சிறந்த கட்டடக்கலை அம்சங்களைக் கொண்டமுறையில் அக்காலத்தில் அமைக்கப்பட்ட கட்டடங்களை கலைத்துவத்துடன் புனரமைத்தலும், புதிய தேவைகளை பூர்த்த செய்தலும் பிரதான தேவைகளாக அறியப்பட்டன. இதன் அடிப்படையில் பெரும் திருத்தவேலைகள், கட்டம் - 1, கட்டம் - 2 என்ற அடிப்படையில் முறையே 28 மில்லியன், 19 மில்லியன் ரூபாய்கள் செலவில் முன்னெடுக்கப்பட்டன. இவற்றின் கீழ் பின்வரும் வேலைகள் செய்து முடிக்கப்பட்டன.

மேலும் ஆசிரியர்கள் தங்கி நின்று பயிற்சி பெறுவது பாரிய பிரச்சினையாகச் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் அவர்களுக்கான விடுதி வசதி மற்றும் சமையல்கூடம் என்பன புதிதாக 67 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டன. இவ் விடுதி 100 மாணவர்கள் தங்கக் கூடியதாகவும், உணவுக்கூடம் 200 பேருக்கான உணவருந்தும் வசதியுடனும், (ஆண்,பெண்) நவீன முறையிலான மலசலகூட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கலாசாலையின் காணி விபரணப்படம், திட்டவரைபு என்பனவும் இவற்றில் உள்ள டக்கப்பட்டன.

சர்வதேச ரீதியாக ஏற்பட்ட கொவிட் - 19 தொற்றுக் காரணமாக பாரிய நிதி நெருக்கடிகளை சந்தித்திருந்தாலும் ஒப்பந்தக்காரர்களின் அர்ப்பணிப்பும், கலாசாலை நிர்வாகத்தின் சிறப்பான ஒத்துழைப்பும் இவ்வேலைகளை செவ்வனே நிறைவேற்ற ஏதுக்களாயின.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ள நிர்மானப் பணிகள் அடங்கிய புகைப்படத் தொகுப்பினையும் காணலாம்.


[redacted]


Block - 3








கட்டம் - 1 திருத்த வேலைகள்
தொகை 28.5 மில்லியன்









[redacted]









## புதிய வேலைகள்
## தொகை 67.7 மில்லியன்









# புதிதாக அமைக்கப்பட்ட விடுதி சிற்றுண்டிச் சாலைகளில் சாந்தி

கல்வி அமைச்சினால் புதிதாக அமைக்கப்பட்ட மாணவர் விடுதி மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பவற்றின் பால் காய்ச்சும் நிகழ்வு புதிதாக சுவாமிப் படங்களை எழுந்தருளச் செய்யும் நிகழ்வும் கடந்த 11.11.2020 புதன்கிழமை காலை நடைபெற்றது. பால் காய்ச்சும் நிகழ்வுக்கு முன்னதாக கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ வி.செல்வசேனக் குருக்கள் வாஸ்துசாந்தி மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து பூரண கும்பம் மற்றும் சுவாமிப் படங்கள் எழுந்தருளச் செய்யப்பட்டன. தொடர்ந்து பால் காய்ச்சிப் பரிமாறப்பட்டது. கலாசாலை அதிபர் வி.கருணலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சு.பரமானந்தம் மற்றும் விரிவுரையாளர்கள் கல்விசாரா அலுவலர்கள் NSBS Project இன் வடமாகாணப் பொறியியலாளர் வாசுதேவன் மற்றும் அலுவலர்கள் கலாசாலையின் பிரதி அதிபர், உபஅதிபர், விரிவுரையாளர்கள், மற்றும் மாணவ தலைவர்கள் என ஐம்பதிற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். இதன் உத்தியோக பூர்வத் திறப்புவிழா கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் விரைவில் நடைபெறவுள்ளது.








இப்பத்திரிகை கோப்பாய் ஆசிரிய கலாசாலையால் 01.12.2020 அன்று மின்னிதழாக வெளியீடு செய்யப்பட்டது.